
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
SATURDAY, AUGUST 13, 2022

சனிக்கிழமை ஒகஸ்ட் 13, 2022 | ஒளி: 08 கதிர் 074 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free



## மின்சாரக்கட்டணத்தை செலுத்துவதில் சலுகை

அதிகரித்துள்ள மின்சார கட்டணத்தை செலுத்துவதில் சலுகை வழங்க எதிர்பார்க்கப்படுவதாகவும், அனைத்து திணைக்கள அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் பயணக் கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும்

தொடர்ச்சி P2

# காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே?

**2000ஆவது நாளில் உறவுகள் கதறல்**



கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் 2,000ஆவது நாளாக நேற்று (12) முன்னெடுக்கப்பட்டது. யுத்த காலகட்டத்தில் கடத்தப்பட்ட, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே என்ற கேள்வியை எழுப்பியவண்ணம் அவர்களுடைய உறவுகள் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொடர்ச்சி P2

## சாத்தான் வேதம் ஓதுகின்றது

### தமிழில் சுட்டிக்காட்டினார் அநுர



ஜனநாயகம் தொடர்பில் பேசினாலும் , அவசரகால சட்டத்தை அடிப்படையாகக் கொண்டே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஆட்சி செய்கின்றார் என ஜே.வி. பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சபையில் கூறியதுடன், ஆளுந்தரப்பின் கருத்துக்கள் "சாத்தான் வேதம் ஓதுகின்றது" என தமிழில் கூறுவதை போன்றுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2


## புதிய அமைச்சரவையில் ராஜபக்ஷர்கள் இல்லை

### நாமலை உள்வாங்க ஒருதரப்பு அழுத்தம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தற்போது நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவையை மேலும் விஸ்தரிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், ஒட்டுமொத்தமாக 30 அமைச்சர்களை உள்வாங்க ஆலோசித்து வருகின்றனர். எனினும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள பட்டியலில் ராஜபக்ஷர்களின் பெயர்கள் உள்வாங்கப்படவில்லை என சிரேஷ்ட உறுப்பினர்கள் மூலமாக தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2



## கூட்டமைப்பு சபைக்குள் போராட்டம்

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்றுடன் 2000 நாட்களை கடந்த நிலையில், தமிழ் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் போராட்டமொன்றை முன்னெடுத்தது.

தொடர்ச்சி P2

சீனக்கப்பலை தடுத்து நிறுத்த

## அமெரிக்காவும் இலங்கைக்கு அழுத்தம்

சீன ஆய்வுக்கப்பலான 'யுவான் வாங் 5' கப்பலின் வருகையானது இலங்கை, இந்தியா மற்றும் சீனாவுக்கு மாத்திரமல்ல அமெரிக்காவுக்கும் இராஜதந்திர ரீதியிலான நெருக்கடியாக அமைந்துள்ளதாகவும். 'யுவான் வாங் 5' கப்பலின் விஜயத்தை தடுத்து நிறுத்த இந்தியாவை போன்று அமெரிக்காவும் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும் அமெரிக்க ஊடகமான வொசிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி P2




## சீனக் கப்பலை அனுமதியுங்கள்

### சுயாதீன பாராளுமன்ற குழு வலியுறுத்து

சீன ஆய்வுக் கப்பலான யுவான் வாங் 5 கப்பலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் நுழைய அனுமதிக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் எதிரணியாக செயற்படும் சுயாதீன கட்சிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. சர்வதேச நட்புறவில் இலங்கை தெளிவாக இருக்க வேண்டும், அதே நேரத்தில் அத்தகைய உறவுகள் இலங்கை-சீன உறவுகளுக்கு எப்போதும் பாதிப்பாக அமைந்துவிடக்கூடாது. இலங்கை-சீன உறவுக்கு களங்கம் ஏற்படாத வகையில், இராஜதந்திர ரீதியில் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ

## பாப்பரசரிடம் இருந்து ஒரு லட்சம் யூரோக்கள்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட தரப்பிற்கு நிதியுதவி செய்யும் விதமாக, பாப்பரசர் ஒரு லட்சம் யூரோக்கள் (400 லட்சம் ரூபாவை) வழங்கியுள்ளதாக கொழும்பு பேராயர் இல்லத்தின் அருட் தந்தை ஜூட் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நாம் எப்போதுமே ராஜபக்ஷர்களுடன்



மஹிந்த ராஜபக்ஷ மீது நாட்டு மக்களுக்கு இன்றும் நன்மதிப்பு உள்ளது. நாம் என்றும் ராஜபக்ஷர்களுடன் இருப்போம். வெகு விரைவில் ராஜபக்ஷர்களுடன் மீண்டெழுவோம் என முன்னாள் அமைச்சரும் பொதுஜன பெரமுன எம்.பியுமான ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (11) இடம்பெற்ற,ஜனாதிபதியின் சிம்மாசன உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்.

தொடர்ச்சி P2

## புதிய ஆளுநர்களை நியமிக்க தீர்மானம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான புதிய அரசாங்கத்தில் நாட்டில் ஒரு சில மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்களை நியமிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற்கமைய மேல் மாகாணத்திற்கு லஷ்மன் யாப்பா அபேவர்தன, கிழக்கு மாகாணத்திற்கு ஆனந்த குணரத்ன மற்றும் மத்திய மாகாணத்திற்கு நவீன் திஸாநாயக்க ஆகியோரை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக தெரிய வருகின்றது.

தொடர்ச்சி P2



## பாகிஸ்தான் போர்க்கப்பல் இலங்கையில்

பாகிஸ்தான் கடற்படையின் ஏவுகணை போர்க்கப்பலான (பி.என்.எஸ்) தைமூர் நேற்று (12) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. வருகை தந்த கப்பலை இலங்கை கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கு அமைய வரவேற்றனர்.

தொடர்ச்சி P2

## ஆசிரியை கைது: அதிபர் தலைமறைவு



கனகராசா சரவணன்

காத்தான்குடி பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 5ல் கல்வி கற்றுவரும் சிறுவனை தாக்கியதையடுத்து சிறுவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## 80 சதவீத வருகை அவசியமில்லை

இந்த ஆண்டு டிசம்பர் மாதம் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு 80 சதவீத பாடசாலை வருகையின் அவசியத்தன்மை கருதப்படமாட்டாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் தொடர்ச்சியாக ஏற்பட்ட பாதக நிலைமைகள், குறிப்பாக அரசியல், பொருளாதார மற்றும் தொற்றுநோய் காரணிகளினால் முறையான பாடசாலை அமர்வுகள் இடம்பெறவில்லை என்பதை கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## 'ஹரக் கட்டா' டுபாயில் கைது

போதைப் பொருள் கடத்தல் காரராகவும், 'ஹரக் கட்டா' என பரவலாக அறியப்படும் தெற்கின் பிரபல பாதாள உலக குழு தலைவன் நந்துன் சிந்தக விக்ரமரத்ன டுபாயில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் சர்வதேச பொலிஸார் ஊடாக, டுபாய் பொலிஸாருக்கு அளித்த தகவலுக்கு அமைய இந்த கைது இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹரக் கட்டா, அவரது மனைவி மற்றும் நெருங்கிய சக்காக்கள் சிலர் டுபாயிலிருந்து மலேஷியா செல்ல தயாரான போது

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சாத்தான் வேதம் ஓதுகின்றது

பாராளுமன்றத்தில் நேற்று (12) நடைபெற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்த நாட்டை எந்தவொரு வெளிநாட்டு நிறுவனமோ, வெளிநாட்டு அரசாங்கமோ மீட்டெடுக்காது. ஆனால் இவர்களின் உதவிகளை பெற்றுக்கொள்ள நாங்கள் நடவடிக்கை எடுக்கலாம். இதற்காக தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதனை தவிர்த்து தானாகவே மீண்டெழ முடியாது. அதேபோன்று வீழ்ச்சியடைய காரணமானவர்களும் இதில் இருந்து மீண்டெழ உதவப் போவதில்லை. பொதுமக்களின் தலையீடு மூலமே மீட்சிபெற முடியும். இந்த நேரத்தில் செய்ய வேண்டியது என்ன? புதிய மக்கள் ஆணைக்கு இடமளிக்க வேண்டும். சர்வகட்சி, பலகட்சி என எந்த அரசாங்கத்தை அமைத்தாலும் மறுநாளே தீர்வை எதிர்பார்ப்பர். ஆனால் அதனை செய்ய முடியாது. இந்த நேரத்தில் புதிய மக்கள் ஆணை ஊடாகவே எதனையும் செய்ய முடியும்.

அதுவரையில் குறுகிய கால வேலைத்திட்டத்துடன் நாட்டை வழமைக்கு கொண்டு வரக்கூடிய சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும். அதற்கான கால எல்லை இருக்க வேண்டும். அனைத்து கட்சிகளுக்கும் நியாயமான உரிமை அந்த அரசாங்கத்திற்குள் இருக்க வேண்டும். சர்வகட்சி அரசாங்கத்தில் அனைவருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் நாங்கள் வேலைத்திட்டங்களை முன்வைத்துள்ளோம் என்றார். இதன்போது ஆளுந்தரப்பினரால் ஜே.வி.பி மீது முன்வைக்கும் விமர்சனங்களுக்கு பதில் தெரிவித்த அநுர எம்.பி, "சாத்தான் வேதம் ஓதுகின்றது" என தமிழில் கூறுவார்கள். அவ்வாறானதே ஆளுந்தரப்பின் கருத்துக்கள் எனவும் தெரிவித்தார்.

## புதிய அமைச்சரவையில்...

இந்நிலையில் நாமல் ராஜபக்ஷவை புதிய அமைச்சரவையில் இணைத்துக்கொள்ள வேண்டும் என பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். இது குறித்து நாமல் ராஜபக்ஷவுடனும் உறுப்பினர்கள் கலந்துரையாடியுள்ளனர்.

எனினும் ஜனாதிபதியின் தீர்மானத்தை மாற்றியமைக்க தன்னால் வலியுறுத்த முடியாது, அவராக எடுக்கும் முடிவுகளுக்கு இடமளிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ள நாமல், வாய்ப்புகள் கிடைத்தால் பணியாற்ற முடியும் என்றாராம்.

# மின்சாரக்கட்டணத்தை செலுத்துவதில்...

சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதிகரித்துள்ள மின்சார கட்டணத்தை செலுத்துவதில் தகுதியான குழுக்களுக்கு சலுகைகளை வழங்குவது தொடர்பில் தற்போது அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது. அத்துடன் திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிவாரணம் பெற வேண்டிய குழுக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்தும் தற்போது விவாதிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மின்சார கட்டணம் தொடர்பில் சில சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்க முடியும் என எதிர்ப்பார்கின்றோம்.

அதேவேளை அனைத்து திணைக்கள அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் பயணக் கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது என்றார்.

# காணாமலாக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே?

## 2000ஆவது நாளில் உறவுகள் கதறல்

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பமான இந்த போராட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மக்கள் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்கள் என பலர் கலந்து கொண்டனர். குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவுகள் இராணுவத்திடம் ஒப்படைத்த பிள்ளைகளுக்கு மரண சான்றிதழ் தான் பதில் என்றால் கொலை செய்தவர்கள் யார்?, உங்கள் இராணுவத்தை நம்பி ஒப்படைத்த பிள்ளைகள் எப்படி காணாமல் ஆக்கப்பட்டனர், கொடுப்பனவுகளை கொடுப்போம் என்று சொல்வது கொலை செய்த கதையை மறைப்பதற்காகவா, எங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதேபோல், சர்வதேச விசாரணையை வலியுறுத்தி முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தின் போது கிளிநொச்சியில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் காரியாலயத்தில், மனித உரிமை ஆணையகத்திற்கு மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர்.

# கூட்டமைப்பு சபைக்குள் போராட்டம்

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ,ஜனாதிபதியின் சிம்மாசன உரை மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் வன்னிமாவட்ட எம்.பி.யான வினோ நோகராத லிங்கம் உரையாற்றிய போது வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்றுடன் 2000 நாட்களை கடப்பது தொடர்பில் கருத்துக்களை தெரிவித்தார்.

இதன்போது தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான தமிழீழ விடுதலை இயக்க எம்.பி.க்களான செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பான பதாகைகளை ஏந்தியவாறு எழுந்து நின்றனர். வினோ நோகராத லிங்கம் எம்.பி.யின் உரை முடிவடையும் வரையில் பதாகைகளை ஏந்தியவாறு இவர்கள் எழுந்து நின்ற போதும் சபையில் எவரும் இவர்களுக்கு எதிர்ப்புத்தெரிவிக்கவில்லை.

# அமெரிக்காவும் இலங்கைக்கு அழுத்தம்

ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருவதற்கான பயணத்தை ஆரம்பித்த 'யுவான் வாங் 5' கப்பல் தற்போதும் இலங்கையில் இருந்து 600 கடல் மைல் தொலைவில் பயணித்துக்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கப்பலின் வருகை குறித்து முக்கியத்துவம் கொடுக்கத் தேவையில்லை என்றாலும், குறித்த கப்பல் தொடர்பில் கடந்த ஒருவார காலமாக பதற்ற நிலையொன்று ஏற்பட்டுள்ளதுடன், இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையே ஒரே நேரத்தில் இலங்கை தொடர்பாக அதிகரித்து வரும் புவிசார் அரசியல் முரண்பாடுகளின் அடையாளமாகவும் மாறியுள்ளது. சீனக் கப்பலின் பயணத்தை நிறுத்துமாறு இந்திய மற்றும் அமெரிக்க அதிகாரிகள் இலங்கை அரசாங்கத்திற்கு கடுமையாக அழுத்தம் கொடுத்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கை இப்போது பாரிய நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள சீனாவின் தயவு இலங்கைக்கு தேவைப்படுகின்ற காரணத்தினால் அதனை சாதனமாக பயன்படுத்தி இலங்கைக்கு இவ்வாறான அழுத்தங்களை கொடுப்பதாகவும், சீனாவுக்கு இலங்கை விசேட சலுகைகளை கொடுப்பதாக அமெரிக்கா கருதுவதாகவும் அந்த செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

# பாகிஸ்தான் போர்க்கப்பல் இலங்கையில்

இந்த கப்பல் ஒகஸ்ட் 15 ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருக்கும். மேலும் இரு கடற்படைகளுக்கு இடையில் ஒத்துழைப்பையும் நல்லுறவையும் மேம்படுத்துவதற்காக இலங்கை கடற்படை ஏற்பாடு செய்யும் பல நிகழ்ச்சிகளில் கப்பலின் பணியாளர்கள் பங்கேற்பார்கள்.

134 மீட்டர் நீளம் கொண்ட இந்த கப்பலுக்கு கெப்டன் எம். யாசிர் தாஹிர் தலைமை தாங்குகிறார், , பி.என்.எஸ் தைமூர் ஒகஸ்ட் 15 ஆம் திகதி புறப்படும்போது மேற்கு கடல் பகுதியில் இலங்கை கடற்படையுடன் கடற்படை பயிற்சியை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# பாப்பரசரிடம் இருந்து ஒரு லட்சம் யூரோக்கள்

இந்த நிதியுதவி, பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகையிடம் கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகை, கடந்த பெப்ரவரி மாதம் வத்திக்கானுக்கு சென்ற வேளையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை தான் பாதுகாப்பதாக பாப்பரசர் உறுதியளித்துள்ளதாகவும், அதற்கமைய பாப்பரசரினால், ஒரு லட்சம் யூரோக்கள் (400 லட்சம் ரூபா) வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# நாம் எப்போதுமே ராஜபக்ஷர்களுடன்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது நாட்டு மக்களுக்கு இன்றும் நன்மதிப்பு உள்ளது. மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகுவது பிரச்சினைக்கு தீர்வாக அமையாது, காலி முகத்திடல் போராட்டத்தில் 'கோ ஹோம் கோட்டா'என குறிப்பிடப்படுகிறதே தவிர மஹிந்தவை வீட்டுக்குச் செல்லுமாறு குறிப்பிடவில்லை.

ஜனநாயக போராட்டம் என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட வன்முறை போராட்டத்தின் உண்மைத் தன்மை தற்போது வெளிப்பட்டு வருகிறது. வன்முறைகளினால் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுவது முற்றிலும் தவறானது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசியலமைப்பின் பிரகாரம் அரசியலில் ஈடுபட அவதானம் செலுத்த வேண்டும். குறுகிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. ரணில்-ராஜபக்ஷ அரசாங்கம் என குறிப்பிடப்படுகிறது. நாம் என்றும் ராஜபக்ஷக்களுடன் இருப்போம். வெகு விரைவில் ராஜபக்ஷக்களுடன் மீண்டெழுவோம் என்றார்.

# புதிய ஆளுநர்களை நியமிக்க தீர்மானம்

எனினும் மேல் மாகாணத்திற்கு ஏ.எச்.எம். பௌசியை நியமிக்க வலியுறுத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தான் கலந்துரையாடுவதாகவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளாராம்.

# ஆசிரியை கைது: அதிபர் தலைமறைவு

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், ஆசிரியை ஒருவர் நேற்று முன்தினம்(11) கைது செய்யப்பட்டுள்ளார். எனினும், பாடசாலையின் அதிபர் தலைமறைவாகியுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள ஒரு பாடசாலையில் கல்விகற்றுவரும் 10 வயது சிறுவன் சம்பவ தினமான 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாடசாலைக்கு சென்றுள்ள நிலையில் பாடசாலைக்கு அருகிலுள்ள கடை ஒன்றுக்கு பாடசாலை இடைவேளை நேரத்தில் சென்று அங்கு சாப்பிடுவதற்கான பொருட்களை வாங்கி வந்துள்ளான்.

இந்த நிலையில் குறித்த சிறுவனை அதிபர் கண்டு வரவழைத்து இந்த சாப்பாடு பொருட்களை வாங்க எங்கிருந்து பணம் கிடைத்தது என கேட்டு குறித்த சிறுவனை தாக்கியள்ளார். வீடு சென்ற சிறுவனின் உடலில் தழும்புகள் இருப்பதைக் கண்டு பெற்றோர் அவனிடம் விசாரித்தனர். தன்னை அதிபர் அடித்துள்ளதாக தெரிவித்துள்ளான்.

இதனையடுத்து காயமடைந்த குறித்த சிறுவனை வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் பொலிஸ் நிலையத்தில் வியாழக்கிழமை (11) முறைப்பாடு தெரிவித்ததையடுத்து சிறுவனை அடிக்க உடந்தையாக இருந்துள்ள ஆசிரியையை பொலிஸார் கைது செய்துள்ளனர். அதிபர் தலைமறைவாகியுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட ஆசிரியையை இன்று (12) நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றப் விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

# 'ஹரக் கட்டா' டுபாயில் கைது

விமான நிலையத்தில் வைத்து இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது. பொலிஸ் தகவல்கள் பிரகாரம், ஹரக் கட்டாவுக்கு எதிராக சர்வதேச பிடியாணை ( சிவப்பு அறிவித்தல்) பிறப்பிக்கப்பட்டுள்ள பின்னணியில் , கடந்த ஒரு மாதமாக சர்வதேச பொலிசாருடன் இணைந்து விஷேட நடவடிக்கை ஒன்றினை சிறப்பு பொலிஸ் குழுவொன்று முன்னெடுத்து வந்துள்ளதாகவும், அவர் இலங்கையிலிருந்து தப்பிச் செல்ல பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் அவரது புகைப்படத்தையும், இறந்த ஒருவரின் தரவுகளையும் உள்ளடக்கிய கடவுச் சீட்டினை கண்டுபிடித்ததை தொடர்ந்து அந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படதாகவும் , அதற்கமையவே அவரைக் கைது செய்ய முடிந்ததாக கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் கைது செய்யப்பட்டவர் ஹரக் கட்டா என்பதை உறுதி செய்து டுபாய் நேற்று நண்பகல் வரை உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதனையும் இலங்கைக்கு வழங்காத நிலையில், அவ்வாறான அறிவிப்பு கிடைத்தவுடன் அவரை நாட்டுக்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சீனக் கப்பலை அனுமதியுங்கள்

இந்தியாவும், சீனாவும் இலங்கைக்கு அதிகளவிலான உதவிகளை வழங்குகின்றனர். இதில் இந்தியாவை கையாள்வதை போன்றே சீனாவுடனும் இராஜதந்திர ரீதியில் முரண்பாடுகள் இல்லாத வகையில் செயற்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, அத்துரலியே ரத்தன தேரர் உள்ளிட்ட எட்டுப்பேர் கையொப்பமிட்டு இவ்வாறு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.



புத்தளத்தில்

# தலைவிரித்தாடும் திருட்டுச் சம்பவங்கள்



ரஸீன் ரஸ்மின்
razeenrasmin87@gmail.com




புத்தளம் மாவட்டத்தில், அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

புத்தளம் பொலிஸ் பிரிவில் தங்க நகைகள், பணம், தண்ணீர் மோட்டர் , சமையல் எரிவாயு, சைக்கிள்கள் உள்ளிட்ட பல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடு தொடர்பில், விசாரணைகளை முடிக்கிவிட்டுள்ளதாக தெரிவித்த புத்தளம் பொலிஸார், சந்தேகத்தின் பெயரில் ஓரிருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

கடந்த வாரம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பிரதி அமைச்சருமான மர்ஹூம் நூர்தீன் மசூரின் புத்தளம், நாகவில்லு பகுதியில் உள்ள வீட்டை உடைத்து, 160 இலட்சம் ரூபாயுக்கும் அதிக பெறுமதியுடைய தங்கம், பணம், பொருட்கள் என்பன திருடப்பட்டுள்ளதாக புத்தளம் தலைமையக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினரும், பிரபல வர்த்தகருமான மர்ஹூம் நூர்தீன் மசூர், கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு திடீரென மாரடைப்பால் மரணமடைந்துள்ளார். முன்னாள் பிரதி அமைச்சரான மர்ஹூம் நூர்தீன் மசூர், பிரபல வர்த்தகர் எனவும், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல வர்த்தக நிறுவனங்களுக்கு சொந்தக்காரர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். முன்னாள் அமைச்சரின் மரணத்துக்குப் பின்னர் அவரது மனைவி, நாகவில்லு வீட்டில் வசித்தி வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில், முன்னாள் அமைச்சரின் மனைவி சில நாள்களாக வீட்டில் இல்லாத போது, வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் தங்கம், பணம், பொருட்கள் என்பனவற்னை திருடிச் சென்றுள்ளதாக வீட்டின் உரிமையாளரான முன்னாள் அமைச்சரின் மனைவி செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். எவ்வாறாயினும், கிடைத்த தகவலின் அடிப்படையில், திருடப்பட்ட ஒருசில பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேற்படி திருட்டுச் சம்பவத்தில் 10 இளைஞர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும், அவர்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

இதேவேளை, புத்தளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரத்மல்யாய , முல்லை ஸ்கீம் கிராமத்தில் இரண்டு வீடுகள் உடைக்கப்பட்டு, தங்க நகைகள், பணம் உட்பட இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் புத்தளம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் முல்லை ஸ்கீம் கிராமத்தில் உள்ள வீடொன்றிற்குள் புகுந்த திருடன், அங்கிருந்த தொலைக்காட்சிப் பெட்டி, ரயிஸ் குக்கர், தங்க நகைகள் உட்பட அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றையும் திருடிச் சென்றுள்ளதாக குறித்த வீட்டின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன், அதே கிராமத்தில் செவ்வாய்க்கிழமை (09) மற்றுமொரு வீடொன்றிலும் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. குறித்த வீட்டின் சமயலறை ஜன்னல் ஊடாக, வீட்டுக்குள் சென்ற திருடன், வீட்டின் அறையில் உள்ள அலுமாரியில் வைக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகை மற்றும் ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளதாக அந்த வீட்டின் உரிமையாளர் பொலிஸில் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

மேற்படி இரண்டு வீடுகளிலும் பகல் வேளைகளில் இவ்வாறு தங்க நகைகள், பணம் உட்பட பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், முதலாவது வீட்டை உடைத்து திருட்டில் ஈடுபட்ட நபர் அடையாளம் காணப்பட்டுள்ள போதிலும் அவர் தற்போது தலைமறைவாகி இருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதுபோன்று பல திருட்டுச் சம்பவங்கள் புத்தளம், கற்பிட்டி, முந்தல் , உடப்பு உள்ளிட்ட பல பகுதிகளில் பதிவாகியிருக்கின்றன.

இன்னும் சைக்கிள்கள், ஓட்டோக்களின் டயர்கள், மோட்டார் சைக்கிள்கள் என திருட்டுகளின் பட்டியல்கள் நீண்டுகொண்டே செல்கிறது.

எரிபொருள் விலை உயர்வு, பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் வீதியோரங்களில் நிறுத்தி வைக்கப்படும் ஓட்டோக்கள் திருடப்படுவது ஒருபுறம் இருக்க, அதனை இரும்பு விலைக்காவது விற்பனை செய்து விட்டு பணத்தை பெறும் நோக்கில் பல திருட்டுகள் இடம்பெற்று வருகின்றமையை மறுக்க முடியாது.

போதைப்பாவனைக்கு அடிமையான நகர்களே இவ்வாறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வருவதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பொருளாதார ரீதியாக இன்று கடும் நெருக்கடியை எதிர்நோக்கி வரும் நிலையில், போதைப் பாவனைக்கு உள்ளானவர்கள் தங்களிடம் பணம் இல்லாத போது களவெடுத்தாவது போதை பொருள் பாவிக்க வேண்டும் என்ற ஒரு நிலையில் இவ்வாறு திருட்டுகளில் ஈடுபட்டு வருகின்றமை தெளிவாக அறியக்கூடியதாக உள்ளது.

இவ்வாறு மக்கள் நடமாட்டமில்லாத வீடுகளை நீண்ட நாள்களாக அவதானித்து, கூரிய ஆயுதங்களுடன் வீடுகளுக்குள் நுழையும் மேற்படி போதைக்கு அடிமையான திருடர்களால், உயிர் அச்சுறுத்தல்களும் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளது என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

பட்டப்பகலில் இவ்வாறு தைரியமாக வந்து வீடுகளை உடைத்து கொள்ளைடித்துச் செல்லும் திருடர்களால், இன்று வீட்டில் தனிமையில் இருப்பதற்கே பெண்கள் அச்சப்படுகின்றனர் என சொல்லப்படுகிறது.

இதேவேளை, யாசகம் கேட்டு வீடுகளுக்கு வருபவர்கள் மீதும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். புத்தளத்தில் சில பிரதேசங்களில் யாசகம் கேட்டு சென்ற நபர்களாலேயே அந்த வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், பொருட்களை விற்பனை செய்யும் போர்வையில் வரும் அடையாளம் தெரியாதவர்கள் விடயத்திலும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதுடன் அறிமுகமில்லாத நபர்களை வீட்டுக்குள் அனுமதிப்பதிலும் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் யோசித்து அதுதொடர்பில் செயற்பட வேண்டும்.

அத்தோடு, கிராமப் புறங்களில் அறிமுகமில்லாத நபர்கள் அல்லது சந்தேகத்துக்கு இடமான முறையில் சுற்றித் திரிவதை அவதானித்தால் அவர்கள் தொடர்பில் ஊரிலுள்ளவர்களுக்கு தெரியப்படுத்தி, சிவில் பாதுகாப்புக் குழுவினர் ஊடாக அதுபற்றி பொலிஸாருக்கு தெரியப்படுத்தி, உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் சம்பந்தப்படுபவர்கள் அல்லது சந்தேகப்படுபவர்கள் தொடர்பில் பொதுமக்கள் யாரும் தண்டனை கொடுக்க முற்படக் கூடாது. அது வேறு ஒரு ரூபத்தில் பிரச்சினையாக உருவெடுக்க வாய்ப்பிருக்கிறது. எனவே, திருடர்களை பிடிப்பதற்கு பொலிஸ் குழுக்கள் இரவு, பகலாக செயற்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் பொதுமக்கள் பொலிஸாருக்கு முழுமையாக ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். அப்போதுதான் மேற்படி திருட்டுகளை முற்றாக ஒழிக்க முடியும்.

புத்தளம் தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ருவன் சுரங்க உடுகும்புரவின் ஆலோசனையில், குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜீவன் குமார தலைமையிலான பொலிஸ் குழு மேற்படி திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, திருட்டை ஒழிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு எப்படி அவசியமாகின்றதோ அதுபோல திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கைது செய்யப்படுபவர்கள் தொடர்பில் இறுக்கமான சட்ட நடவடிக்கைகளை எடுக்க பொலிஸார் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்டம் கடுமையான முறையில் அமல்படுத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

‘ஓபன் டிக்கெட்’

# அச்சுறுத்தல் வலயத்தில் பயணிக்கிறோம்...



ஆர். யசி
yasiharany@gmailcom




இன்னும் காலம் கடந்துவிடவில்லை. இப்போதாவது கண் திறந்து பார்க்காமல் போவீர்கள் என்றால் பயங்கரமான ஆபத்துகளை சந்திக்க நேரிடும். ஒரு நாட்டின் பொருளாதாரம் நாசமாகும் போதுதான் போராட்டங்கள் வெடிக்கின்றன. கல்வி, வேலை வாய்ப்புகள் குறையும் போதுதான் கலவரங்கள் அரங்கேறுகின்றன. கடந்த காலங்களில் இலங்கையின் நிலைமையும் இவ்வாறானதே. பொருளாதார நிபுணர்களின் கருத்துகளுக்கு அமைய இலங்கை அதன் இறுதி மூச்சை சுவாசித்துக் கொண்டிருப்பதாகவே கூறுகின்றனர். நாட்டுக்கு அவசியமான எரிபொருள் அடுத்த இரண்டு வாரங்களுக்கு பின்னர் கிடைக்குமா என்ற சந்தேகம் உள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதனுடன் சேர்ந்து நாட்டின் ஒட்டுமொத்த கட்டமைப்புமே வீழ்ச்சியடையும். கடந்த சில மாதங்களாக அதனை கண்முன்னே பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

தலைகளை மாற்றினால் நாட்டின் நிலைமை தானாக மாறும் என்ற நிலைப்பாடும் இல்லாமலில்லை. ஆட்சி மாறினால் அனைத்துமே ஒரு கட்டமைப்பின் கீழ் வரும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாக இருந்தது. அரசியல் ஸ்திரத்தன்மை உருவாகினால் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்கலாம் என்பதே கணிப்பாகும். பல நாங்கள் போராட்டத்திற்கு பின்பு வன்முறைகள், அடக்குமுறைகள் என பலவற்றைக் கடந்து இப்போது புதிய ஜனாதிபதியின் கீழ் புதிய பிரதமர் உள்ளடங்கிய அரசாங்கம் உருவாகினாலும் கூட நாட்டின் பொருளாதார பிரச்சினைகள் இருப்பதை விடவும் மோசமாக நகர்ந்துகொண்டுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. வெளிநாட்டு கையிருப்பை தக்கவைத்துக்கொள்ளவோ அல்லது அதிகரிக்கவோ முடியாதுள்ள இந்த நேரத்தில் மத்திய வங்கி பாரிய நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. இது தேசிய வங்கிக்கட்டமைப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்ற எச்சரிக்கையை மத்திய வங்கி தொடர்ச்சியாக விடுத்து வருகின்றது. இருந்ததை விடவும் மோசமான பொருளாதார நெருக்கடியையே புதிய அரசாங்கம் எதிர்கொண்டுள்ளது. இதனை கூடிய விரைவில் ஜனாதிபதி ரணில் வெற்றிகொள்ள வேண்டும். இல்லையேல் முன்னைய ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் நேர்ந்த கதியே இவருக்கும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை இப்போது கடன்களை நம்பி காலடி எடுத்துவைக்கும் நாடாக மாறிவிட்டது. யாராவது கடன் தரமாட்டார்களா என்ற எதிர்பார்ப்பு மட்டுமே இலங்கையிடம் உள்ளது. இம்மாத நடுப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்பட்டாலும் கூட, இன்றைய சூழ்நிலையில் அதனை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிதி கிடைத்தவுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிடமும் புதிய கடன்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புகள் இருந்தன. ஆனால் உலக வங்கி எமக்கு விடுத்துள்ள எச்சரிக்கையை அடுத்து எம்மால் இந்த நிதிகளையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையொன்று ஏற்பட்டுள்ளது. போதிய பொருளாதார கொள்கை கட்டமைப்பை உருவாக்கும் வரையில் இலங்கைக்கு எந்தவொரு நிதி உதவிகளையும் செய்வதில்லை என அவர்கள் திட்டவட்டமாக அறிவித்துவிட்டனர். அதாவது அனாவசிய சகல செலவுகளையும் முழுமையாக நிறுத்திவிட்டு, அரசாங்கம் முன்வைக்கும் வரவு செலவு திட்டத்தில் வரவுக்கும் செலவுக்கும் இடையிலான இடைவெளியை 5-6 வீதத்திற்கு கொண்டுவர வேண்டும். அதேபோல் அளவுக்கு அதிகமான கடன் சுமையை மத்தியவங்கி சுமந்துகொண்டுள்ளது. அதனையும் குறைத்தாக வேண்டும். உலக வங்கியும் இதனையே சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால் இது குறித்துஅரசாங்கமோஜனாதிபதியோ கவனம் செலுத்துவதாக தெரியவில்லை.

அதுமட்டுமல்ல சர்வதேச நாணய நிதியம் எமக்கு புதிய கடன் நிதியை பெற்றுகொடுக்கும் பட்சத்தில் எமது தேசிய மற்றும் சர்வதேச கடனை மறுசீரமைப்பை செய்தாக வேண்டும். இலங்கை சுமார் 24 பில்லியன் அமெரிக்க டொலரை சர்வதேச இருதரப்பு கடனாக செலுத்தவேண்டியுள்ளது. நாட்டின் ஒட்டுமொத தேசிய -சர்வதேச கடனானது 69 பில்லியன் அமெரிக்க டொலராகும் . அதனை எம்மால் செலுத்த முடியாத நிலைமையில் உள்ளோம். இவற்றில் இருதரப்பு கடன் மறுசீரமைப்பை செய்யவேண்டுமாயின் பாரிஸ் கிளப் அமைப்பின் ஊடாகவே அதனை கையாள வேண்டிவரும். எனினும் எமது பிரதான கடன் வழங்குனர்களான சீனா மற்றும் இந்தியா ஆகியவை பாரிஸ் கிளப் அமைப்பின் உறுப்பு நாடுகள் அல்ல. ஆகவே இலங்கையின் கடன் மறுசீரமைப்பின் போதும் சீனாவை இதற்குள் கொண்டுவந்தாக வேண்டியது கட்டாயமாகும். அண்மையில் ஐ.எம்.எப் பிரதிநிதிகள் கூட கடன் மறுசீரமைப்பில் சீனாவை இணக்கத்திற்கு கொண்டுவருமாறு இலங்கையை வலியுறுத்தியிருந்தனர்.

உண்மையிலேயே சீனாவுக்கு இவ்வாறான வேலைத்திட்டங்கள் பிடிப்பதில்லை. அவர்கள் இதுவரை காலமாக அவ்வாறான எந்த ஒத்துழைப்பையும் தமது கடனாளிகளுக்கு செய்து கொடுத்ததுமில்லை. குறிப்பாக சொல்லப்போனால், அவர்கள் கடன்களை வெட்டுவதில்லை, அதற்கு பதிலாக புதிய கடன்களை கொடுத்து பழைய கடன்களை முழுமையாக செலுத்திவிட்டு புதிய கடன்களை கொண்டு செல்லுங்கள் என்பதே அவர்களது நகர்வாகும். எனினும் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் அண்மையில் சம்பியாவிற்கு சீனா இணக்கம் தெரிவித்துள்ள காரணத்தினால் இலங்கைக்கும் அவ்வாறான வாய்ப்புகளை சீனா வழங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எது எப்படியானாலும், அடுத்த மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் கடன் மறுசீரமைப்பு குறித்து இலங்கை ஏதேனும் இணக்கத்தின் மூலமாக தீர்வு கண்டால் மாத்திரமே அடுத்த ஆண்டு ஜனவரி மாதமளவிலேனும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு நிதி உதவி கிடைத்தாலும் 800 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் உதவியே கிடைக்கும். காலம் தாழ்த்தப்பட்ட கடன் தொகையாக 3200 மில்லியன் டொலர் ஒதுக்கப்படும். அதில் உடனடியாக 400 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்ள முடியும். அப்படியென்றால் ஜனவரி மாதமளவில் 1200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கும். ஆனால் அதுவரை காலத்திற்கு எமக்கு 5000 மில்லியன் டொலர் செலவுக்காக தேவைப்படுகின்றது. அதனை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதே எமக்குள்ள மிகப்பெரிய சவாலாகும். இதனை ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இன்றுள்ள நிலைமைகளின் அடிப்படையில் உலக வங்கி விடுத்துள்ள எச்சரிக்கையை அடுத்து ஆசிய அபிவிருத்தி வங்கியும் இதே எச்சரிக்கையை விடுத்தால் எம்மால் இவர்களிடம் இருந்து கடன்களை பெற்றுக்கொள்ள முடியாது போகும். அவ்வாறான நிலையில் இருதரப்பு கடன்களையே நாடிச்செல்ல நேரிடும். கடன்களை நாடிச்செல்வதென்றால் ஒன்று மேற்கு பக்கமாக செல்லவேண்டும். ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளிடம் கரம் நீட்ட வேண்டும். ஆனால் அங்குதான் புதிய சிக்கல்களுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அவர்கள் பொதுவாகவே மனித உரிமை மீறல்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தும் நாடுகளாகும். இந்த விடயங்களில் இப்போதும் இலங்கைக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்துக்கொண்டுதான் உள்ளனர். துரதிஷ்டவசமாக புதிய ஜனாதிபதியும், அரசாங்கமும் இன்னமும் மனித உரிமைகளை பாதுகாப்பதில் அக்கறை செலுத்தவில்லை. இலங்கை தீவுக்குள் நடப்பது எதுவுமே தீவுக்கு வெளியில் தெரியாது என்ற நிலைப்பாட்டில் உள்ளனரோ என்னவோ. ஆகவே இந்த நாடுகள் இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் அதிருப்தியில் உள்ள காரணத்தினால் இவர்களிடம் இருந்து கடன்களை பெற்றுக்கொள்ள முடியாமல் போகலாம்.

சரி! இந்தியா உள்ளதே, எப்போதும் போல கேற்போம் என்றால் அதற்கும் இனி சாத்தியமில்லை. இந்தியாவும் அண்மைக்காலமாக இலங்கையை போன்ற மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றது. இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு குறைந்ததை விடவும் வேகமாக இந்தியாவின் கையிருப்பு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறான நிலையில் இந்தியா எமது சுமையையும் சேர்த்து சுமக்கப்போவதில்லை. ஆகவே எமக்குள்ள ஒரே தெரிவு சீனாவுடன் இணங்கி செல்வது மட்டுமேயாகும். கடன்களுக்காக சீனாவை நாம் முழுமையாக நாடுவது வேறு விதமான பூகோள அரசியல் நெருக்கடிகளுக்கு எம்மை கொண்டு செல்லும். இந்த நிலைமைகளை புதிய ஜனாதிபதியும் அரசாங்கமும் சரியாக கையாள வேண்டும். இலங்கை இப்போது எச்சரிக்கை வலயத்தில் பயணித்துக்கொண்டுள்ளது. இதில் பொருளாதார நெருக்கடி மட்டுமல்லாது பூகோள அரசியல் ரீதியிலான நெருக்கடிகளையும் சந்திக்க நேரிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

# ஏறாவூர் படுகொலைகள் தந்த துயரங்கள்



ஏ.எச்.ஏ ஹுஸைன்
husseinmedia000@gmail.com

**1990ஆம் ஆண்டு என்பது இலங்கையில் இனப்படுகொலைகளுக்கும் இனச்சுத்திகரிப்புக்கும் அகதி வாழ்க்கைக்கும் பெயர் போன இருண்ட காலகட்டமாக இன்றளவும் பார்க்கப்படுகின்றது.**

இனப்படுகொலைகள் நடந்து இப்பொழுது 32 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் அந்தத் துயரங்கள் ஏற்படுத்திய இதயக் காயங்கள் இன்னமும் மாறாமல் மறையாமல் நெஞ்சை நெருடுகின்றது.

மட்டக்களப்பு  கொழும்பு நெடுஞ்சாலையில் மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே பயணிக்கும்போது சுமார் 12 கிலோ மீற்றர் தொலைதூரத்தில் அமைந்திருக்கிறது ஏறாவூர் நகரம். இந்த ஊர் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுடன் சுமார் 50 ஆயிரம் சனத்தொகையை தன்னகத்தே கொண்டுள்ளது.

1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இன வன்முறைகளையும் முஸ்லிம்கள் மீதான கூட்டுப் படுகொலைகளையும் தொடர்ந்து, ஏறாவூர் பகுதி திறந்தவெளி அகதி முகாம் போலவும் அங்கிருந்து வெளியில் நகரமுடியாத உயிரச்சுறுத்தல் இருந்ததாலும் ஏறாவூர் நகர மக்கள் அரச நிர்வாகக் கடமைகளுக்காக பிரதேச செயலகம் அமைந்திருந்த ஏறாவூரிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் குறைவாகவுள்ள செங்கலடிக்குச் செல்ல முடியாமல் போனதாக பிரதேச முஸ்லிம்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயுதம் ஏந்திய, உரிமைப் போராட்டம் என்று கூறிக் கொண்ட அமைப்பினரால் 1990ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கூட்டு இனப்படுகொலையின் பின்னர், ஏறாவூர் மக்கள் தமது நிர்வாக ரீதியான கருமங்களுக்காக ஊரை விட்டு வெளியேறமுடியாத நிலைமை ஏற்பட்டபொழுது, ஏறாவூர் நகருக்கென தனியான பிரதேச செயலகம் அமைக்கப்பட்டது.

ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலகப் பிரிவிலமைந்துள்ள மட்டக்களப்பு  பதுளை வீதியை அண்டியுள்ள பகுதிகளிலேயே வாழ்வாதாரத்துக்கான பூர்வீகக் கிராமங்களும் உள்ளன. ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள், சேனைப் பயிர்த் தோட்டங்கள், பல்லாயிரக்கணக்கான கால்நடைகள், நன்னீர் மீன்பிடி உள்ளிட்ட பல்வேறு வாழ்வாதாரத் துறைகளில் அவர்கள் ஈடுபட்டு வந்தனர்.

1985 ஏப்ரலுக்குப் பின்னரான காலப்பகுதியில் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த முஸ்லிம்களில் பலர், அவ்வப்போது ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டனர். கிராமங்களில் வாழ்ந்த அத்தனை முஸ்லிம்களும் இனச்சுத்திகரிப்புச் செய்து விரட்டியடிக்கப்பட்டதால், அவர்கள் அருகிலுள்ள ஏறாவூரிலும் அயல் மாவட்டங்களான பொலன்னறுவை, அம்பாறை மாவட்டங்களின் முஸ்லிம் பகுதிகளுக்கும் இடம்பெயரலாயினர்.

இவ்வாறிருக்கும் தறுவாயிலேயே, 1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஏறாவூர் பொலிஸ் நிலையம் எல்ரீரீஈ இனரால் தாக்கப்பட்டது. எனவே, ஏறாவூர் முஸ்லிம் நகரம் பாதுகாப்பு எதுவுமற்ற நகரமாக இருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான முஸ்லிம் நகரங்களில் ஒன்றான ஏறாவூரிலும் இனச்சுத்திகரிப்புச் செய்து, அவர்களை அங்கிருந்து விரட்டியடிக்கும் நோக்கில், முஸ்லிம்கள் மீது கூட்டுப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன.

1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11ஆம் திகதி இரவு 9 மணியளவில் ஏறாவூருக்குள் புகுந்த ஆயுததாரிகள், கர்ப்பிணியின் வயிற்றைக் கீறிக்கிழித்து சிசுவை வெளியே எடுத்து, அம்மியில் வைத்து அடித்துக் கொன்றதாக சம்பவத்தில் பாதிக்கப்பட்டு தற்போதும் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏறாவூரில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், நிறைமாதக் கர்ப்பிணிகள் என வயது வரம்பு வித்தியாசமின்றி 121 பேர் சுட்டும் வெட்டியும் குத்தியும் எரித்தும் கொல்லப்பட்டிருந்தனர்.

கற்றுக் கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்திற்குமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில், கடந்த 30 வருட கால ஆயுத வன்முறைகளில் இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட இடர்கள்பற்றி விவரிக்கப்பட்டுள்ளதாக, இலங்கை தேசிய சமாதானப் பேரவை அதன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

> **படுகொலை செய்யப்பட்ட 121 தியாகிகளின் 32ஆவது நினைவு நிகழ்வை அனுஷ்டிக்கும் முகமாக காட்டுப்பள்ளி வாசலில் அடக்கஸ்தல வளாகம் துப்புரவு செய்யப்பட்டு நினைவுக் கற்களும் நாட்டப்பட்டன**

தமிழீழ விடுதலைப் புலிகளினால், முஸ்லிம் சமூகத்தின்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகள்பற்றி, கற்றுக் கொண்ட பாடங்களுக்கும் நல்லிணக்கத்துக்குமான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள், துப்பாக்கி முனையில் மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையால் முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டமை தொடர்பான தகவல்கள் ஆணைக்குழுவின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (ஆணைக்குழு அறிக்கை 8.167) தொடர்ந்து செல்லும் முஸ்லிம் சமூகத்தின் மனக்குறைகள் தொடர்பாக ஆவன செய்வதுபற்றி ஆணைக்குழு குறிப்பான சிபார்சுகளைச் செய்துள்ளது.

வெளியேற்றப்பட்டவர்களாகிய முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் முரண்பாட்டின் பின்னர் நல்லிணக்கம் காண்பதில் பெரும் சிக்கல் வாய்ந்தனவாயுள்ளதாக ஆணைக்குழு அவதானித்துள்ளது.

வட மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் நன்கு ஒழுங்குபடுத்தி முன்கூட்டியே திட்டமிடப்பட்ட முறையில் இனச்சுத்திகரிப்புச் செய்து வெளியேற்றப்பட்டுள்ளனர். (அறிக்கை 5.137)

இலங்கையின் முரண்பாடு பற்றிய வரலாற்று ஆவணங்களில் முஸ்லிம்கள் தமது பூர்வீக இடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டது பற்றி சரியான முறையில் எழுதப்படவில்லையென முஸ்லிம்கள் உணருகின்றனர்.

எல்ரீரீஈ இனரால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புச் செய்திகளை இலங்கை அரசாங்கம் போதியளவு அங்கீகரிக்கவில்லை எனவும் முஸ்லிம்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

உதாரணமாக, வடபகுதியில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களை அவர்களது வாழ்விடங்களிலிருந்து நன்கு திட்டமிடப்பட்ட முறையில் இனச்சுத்திகரிப்புச் செய்து, பலவந்தமாக வெளியேற்றியமை தொடர்பில் ஒரு ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து விசாரணை செய்யுமாறு, முஸ்லிம்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.









ஏறாவூரில் ஓரிரவில் படுகொலை செய்யப்பட்ட 121 தியாகிகளின் 32ஆவது நினைவு நிகழ்வை அனுஷ்டிக்கும் முகமாக காட்டுப்பள்ளி வாசலில் அடக்கஸ்தல வளாகம் இம்முறை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு நினைவுக் கற்களும் நாட்டப்பட்டன.

தியாகிகள் ஞாபகார்த்தப் பேரவையின் ஸ்தாபகத் தலைவர் எம்.எல். அப்துல் லத்தீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் ஊர்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

கறைபடிந்த வரலாறாகியுள்ள தியாகிகள் தினத்தை வருடாந்தம் அனுஷ்டிப்பதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் மனவடுக்களைக் குணப்படுத்துவதும் அவர்களது நலனோம்பு விடயங்களை முன்னெடுப்பதும் இன்னபிற சமூகநல செயற்பாடுகளின் மூலம் இன ஐக்கியத்தை வளர்ப்பதும் நோக்கமாகும் என தியாகிகள் ஞாபகார்த்தப் பேரவையின் தலைவர் லத்தீப் தெரிவித்தார்.

32 வருடங்கள் கடந்தாலும் காத்தான்குடி பள்ளிவாசல் சுவர்களில் முஸ்லிம்களைக் கொன்றொழித்த துப்பாக்கி துளைத்த ஓட்டைகள் மாறாத வடுக்களாக இன்னமும் காணப்படுகின்றன. அதேபோல ஏறாவூரில் தியாகிகள் பூங்கா யுத்த கால வன்முறை அநீதிகளின் அத்தாட்சியாக இன்றும் விளங்குகின்றன.

அரசியல் வாதிகளின் நடிப்பிலும் ஆயுததாரிகளின் அதிகாரத்திலும் மத வியாபாரிகளின் விளம்பரங்களிலும் மயங்கி, மானிட நேசத்தைச் சிதைத்தவர்களே! உடைந்து போன உறவு மடிந்து போகும் முன்பே, ஒட்டி எடுப்போம் வாருங்கள்! அறுந்து போன அன்பு இறந்து போகும் முன்பே முடிச்சுப் போடுவோம் வாருங்கள்.

# மயிலந்தனை படுகொலை 30ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

அதிரன்

மட்டக்களப்பு மாவட்டம், கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மயிலந்தனை கிராமத்தில் 1992ஆம் ஆண்டு நடைபெற்ற படுகொலைச் சம்பவத்தின் 30ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு செவ்வாய்க்கிழமை (09) மயிலந்தனை விநாயகர் கோவிலில் நடைபெற்றது.

நிளைவு நாளை முன்னிட்டு ஆலயத்தில் பொங்கல் பொங்கி, விசேட பூஜை பிரார்த்தனை நடைபெற்று, நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிராம மக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆலய மதகுருக்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வின் நிறைவில், தங்களுக்கு மறுக்கப்பட்ட நீதியை மீண்டும் பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கோரி ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மகஜரை ஆலய மதகுருவிடம் கிராமமக்கள் கையளித்தனர்.

மட்டக்களப்பு நகருக்கு வடக்கே 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புனாணை, மயிலந்தனை கிராமத்தில் 1992ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி எமது மயிலந்தனை கிராமத்தைச் சார்ந்த சிறுவர்கள், பெண்கள் அடங்கலாக 39 பேர் வெட்டியும் சுடப்பட்டும் கொலை செய்யப்பட்டார்கள். 34 பேர் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அன்றைய நாளில் 35 தமிழர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 4 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

இதன் போது எமது கிராமத்தினை சேர்ந்த நேரில் கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் புனாணை இராணுவ முகாமைச் சேர்ந்த இலங்கை இராணுவத்தினரே இப்படுகொலைகளை நிகழ்த்தியதாக வழக்குத் தொடுக்கப்பட்டது.

1993 ஆம் ஆண்டு சித்திரை இரண்டாம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்று, 24 இராணுவத்தினர் எமது கிராமத்தில் உயிர் தப்பிய எங்களால் அடையாளம் காட்டியிருந்தனர்.

பின்னர் இவ்வழக்கு பொலன்னறுவை நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இருந்த போதும் குற்றம் சாட்டப்பட்டவர்களின் பாதுகாப்புக் கருதி சட்டமா அதிபர் இவ்வழக்கை கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றினார். இதனால் எமது கிராமத்தினைச் சேர்ந்த சாட்சிகள் கொழும்பு சென்று சாட்சி சொல்வதற்குப் பெரும் சிரமப்பட்டதுடன், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்ட நிலையில் 1993 புரட்டாதி மாதத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

மட்டக்களப்பிலிருந்து 30 இற்கும் அதிகமான சாட்சிகள் விசாரணையில் கலந்து கொண்டனர். தீவிர விசாரணையின் பின்னர் தீர்ப்புக் கூறும் முடிவு ஜூரி குழுவுக்கு கொடுக்கப்பட்டது. வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட எந்த ஒரு இராணுவத்தினரும் குற்றம் இழைக்கவில்லை என ஜூரி குழு ஏகமனதாகத் தீர்ப்பளித்தது. மீண்டும் இதனைப் பரிசீலிக்குமாறு நீதிபதி கேட்டுக் கொண்ட போதும், ஜூரி சபையினர் அவர்களைக் குற்றமற்றவர்கள் எனக் கூறினர். படுகொலை செய்யப்பட்டவர்கள் சார்பாக மேன்முறையீடு செய்வதற்கு சட்டமா அதிபர் ஒப்புதல் அளிக்கவில்லை.

குற்றம் சாட்டப்பட்ட 18 இராணுவத்தினரும் நவம்பர் 27ஆம் திகதி 2002 விடுதலை செய்யப்பட்டனர். இத்தீர்ப்பினை அடுத்து மனித உரிமைச் செயற்பாட்டாளர், சிவில் அமைப்புகள், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள், கிராம மக்களும் இது குறித்து அதிருப்தியடைந்தனர்.

மயிலந்தனை படுகொலை நடந்து இன்று 30ஆம் ஆண்டு நினைவு தினத்தில் மீளவும் நீதிக்காக தங்களது கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

1. எமது வழக்கு மீண்டும் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஜூரி முறை விசாரணையை நாம் ஏற்க மறுக்கிறோம்.
2. சாட்சிகளுக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.
3. சாட்சிகளின் வழக்கு செலவை அரசு பொறுப்பேற்க வேண்டும்.
4. பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.
5. மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். அதற்கான அரச தரப்பு முன்னெடுப்புகளை அறிவித்தல் வேண்டும்.

என்று மயிலந்தனை கிராம மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### தமிழர்களிடையே ஒற்றுமை இல்லாவிட்டால்

# திராய்க்கேணியின் நிலைமை முழு கிழக்குக்கும் நேரும்

## 32 ஆவது வருட திராய்க்கேணி படுகொலை நினைவு

வி.ரி. சகாதேவராஜா

1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆறாம் திகதி இடம்பெற்ற திராய்க்கேணி படுகொலை சம்பவத்தின் 32ஆவது வருட நினைவேந்தல் நிகழ்வு, சம்பவம் இடம்பெற்ற திராய்க்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் நடைபெற்றது. அகம் மனிதாபிமான வள நிலையமும் சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சூழலியல் நீதிக்கான மக்கள் கூடல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் துரையப்பா காத்தவராயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், பிரபல சமூக செயற்பாட்டாளர் த.பிரதீபன், சூழலியல் அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளர் ரி. கிருஷாந்த், அகம் அமைப்பின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் திருமதி நவரட்ணம் அஞ்சலிதேவி ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள்.

ஆரம்பத்தில், படுகொலையின் போது வெட்டிக்கொலை செய்யப்பட்ட 54 பேரின் திருவுருவப் படங்களுக்கு முன்னால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் அஞ்சலி செலுத்தி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

படுகொலை சம்பவத்தில் கணவர்மாரை இழந்து விதவைகளான 40 பேரில், கண்முன்னே சம்பவத்தை பார்த்து இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இரண்டு தாய்மார்களான அன்னம்மா, மாரிமுத்து, கிராம தலைவர் சி. கார்த்திகேசு ஆகியோர் அழுது அழுது உரையாற்றினார்கள்.

இங்குபாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் உரையாற்றுகையில், “எந்த இனமாக இருந்தாலும் ஆலயம் என்பது புனித ஸ்தலமாக இருக்கும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில் இந்து ஆலயத்தில் தான் அதிகமான படுகொலைகள் இடம் பெற்று இருக்கின்றன. அரசாங்கமே இராணுவத்தையும் முஸ்லிம் ஊர்காவல் படையினரையும் பயன்படுத்தி இந்தத் திட்டமிட்ட படுகொலையை செய்தது.

“அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி மட்டும் அல்ல; உடும்பன் குளத்தில் 151 விவசாயிகள் சுற்றி வளைக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்கள். சொறிக்கல்முனையில் செல்வராஜா பாதர் உட்பட நூற்றுக்கு மேற்பட்ட கிறிஸ்தவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வீரமுனையிலும் ஆலயத்தில் வைத்து நூற்றுக்கணக்கான தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

“அம்பாறை மாவட்டத்தில் 58 தமிழ்க் கிராமங்களை இலக்கு வைத்து, இன அழிப்பு நடத்தப்பட்டது. ஆலங்குளம், மீனோடைக்கட்டு போன்ற கிராமங்கள் ஒரு தமிழர்களும் இல்லாமல் முற்றாக கபளீகரம் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் இராணுவமும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும் இணைந்து செய்தார்கள் என்பது மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை” என்றார்.

“அம்பாறை மாவட்ட தமிழர்களின் அடையாளத்தை இல்லா தொழிக்கவேண்டும் என்பதற்காக 1983 களிலிருந்து தொடர்ச்சியாக திட்டமிட்டு பல படுகொலைகளை செய்துள்ளார்கள். உண்மையில் அது நில ஆக்கிரமிப்பின் மறுவடிவமே. அந்த வகையில் குரூரமாக, ஈவிரக்கமின்றி மேற்கொள்ளப்பட்ட திராய்க்கேணி படுகொலைக்கு இன்று 32 வருடங்களாகின்றன. நாம் எந்தவோர் இனத்துக்கோ சாதிக்கோ அநியாயம் செய்ய மாட்டோம். நாங்கள் அவர்களுக்கு எதிரானவர்களும் அல்ல; ஆனால், எமது நிலங்களை சூறையாட வருபவர்களுக்கு எதிராக, நாங்கள் தொடர்ச்சியாகப் போராடுவோம்.

“முஸ்லிம் மக்கள் அனைவரும் இதில் சம்மந்தப்பட்டார்கள் என்று கூறவில்லை. ஆனால், ஒரு சில முஸ்லிம் இனவாதிகள் முன்னணியில் இருந்து இந்தப் படுகொலைகளைச் செய்ததாக கண்ணால் கண்ட திராய்க்கேணி மக்கள் இங்கு பேசுகையில் கூறுகின்றனர். ஆறு நாள் குழந்தையை கூட, ஆலமரத்தில் அடித்து ஈவிரக்கம் இன்றிக் கொன்றிருக்கின்றார்கள்.

“இன்னும் இந்த கொலைகளுக்கு நீதி கிடைக்கவில்லை. ஓர் ஆறுதலுக்காவது ஒரு வழக்குத்தானும் போடப்படவில்லை. இந்த நிலையில், இங்கு இந்த மக்கள் ஐம்பது வீதமாக குறைந்து வாழ்க்கையை கடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ” என்று நினைவேந்தலின் போது உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார் .



# மீண்டெழும் அறுகம்பை

**பாறுக் ஷிஹான்**

அம்பாறை, அறுகம்பை சுற்றுலா மையம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் வீழ்ச்சியடைந்து, தற்போது அதிலிருந்து மீண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இயற்கை எழில்மிகு பிரதேசங்கள் பலவற்றைக் கொண்டமைந்த எமது இலங்கைத் தேசமானது, வனப் பிரதேசங்கள், மலை முகடுகள், அதிலிருந்து ஊற்றெடுக்கும் கங்கைகளுடன் பறவையினங்கள் போன்றவைகள் எல்லாம் அழகுக்கு அழகு சேர்ப்பனவாக உள்ளன. இதனால் தான் இலங்கை தீவு உல்லாசப் பயணிகளின் பயணப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளதெனலாம்.

எமது நாட்டுக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகள், ஒரேயொரு முறையுடன் பயணத்தை நிறுத்திக் கொள்ளாது, வருடா வருடம் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர். இதற்கு எமது நாட்டின் பூகோள அமைப்பே பிரதான காரணமாக அமைந்துள்ளது. அதாவது, 12 மணி நேரத்தில் சூடு, குளிர் மிதமான காலநிலையை அனுபவிக்கக் கூடிய ஒரே ஒரு நாடாக உள்ளதே மூலகாரணம் என கூற முடியும்.

காலையில் அம்பாறை அறுகம்பை கடற்கரையில் கடலலை சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டு விட்டு, மதியம் நுவரெலியாவில் ஓய்வு எடுக்கக் கூடிய சூழ்நிலை இருப்பது, எமது நாட்டுக்கு அதிக மதிப்பெண்ணாக உள்ளதெனலாம்.

முன்னர் யுனஸ்கோவால் அறிவிக்கப்பட்ட புராதன இடங்களுக்கு மட்டுமே சென்று வந்த சுற்றுலாப் பயணிகள், தற்போது அதிகளவில் கரையோரப் பிரதேசங்களின் எழில்மிகு அழகிய காட்சிகளை கண்டு அனுபவிக்கும் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. இதன் மூலமாக, அதிக நாள்கள் நாட்டில் தங்கியிருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படலாயிற்று. இதனால் எமது நாட்டின் அந்நிய செலாவணி வருமானத்தில் கணிசமான அதிகரிப்பு தோன்றியது.

எமது நாட்டில் உல்லாசப் பயணிகளை அதிகம் கவர்ந்திருக்கின்ற இடங்களில் ஒன்றாக, அம்பாறை மாவட்டம் அறுகம்பை முக்கிய இடத்தில் உள்ளது. இந்த அறுகம்பை ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்பிருந்தே, அந்நியர்களின் சிறிய மீன்பிடித்துறைமுகமாகவும் பொழுதுபோக்கு இடமாகவும் இருந்துள்ளது.

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில், அறுகம்பே இலங்கையிலுள்ள சுற்றுலாத் தலங்களில் மிகவும் புகழ்பெற்ற ஒன்றாகும். 1996ஆம் ஆண்டு இலங்கை அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம், அறுகம்பே, சுற்றுலாத் தலமாக அறிவிக்கப்பட்டது. அறுகம்பே இயற்கையாகவே அழகு நிறைந்த பகுதியாகும். குறிப்பாக, இங்குள்ள கடற்கரை, சுற்றுலா பயணிகள் மிகவும் விரும்புகிற ஒன்றாகும்.

மேலும், 'சர்பிங்' எனப்படும் கடலலைச் சறுக்கு விளையாட்டுக்கு, உலகளவில் மிகவும் சிறந்த இடங்களில் அறுகம்பேயும் ஒன்றாக புகழ்பெற்றுள்ளது. ஏப்ரல் முதல் ஓகஸ்ட் மாதம் வரை, உலக நாடுகளில் இருந்து அறுகம்பே பகுதிக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். இதனால், தற்போது சுற்றுலாப் பயணிகளால் அறுகம்பே களைகட்டியுள்ளது. அவுஸ்திரேலியா, சுவிட்ஸர்லாந்து, ஜேர்மனி, பின்லாந்து, ஸ்பெயின், இஸ்ரேல், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அறுகம்பே பகுதிக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

அறுகம்பேயில் தங்கும் விடுதிகள், உணவுச்சாலைகள் தற்போது உல்லாச பிரயாணிகளின் வருகையால் புத்துயிர் பெற்று வருகின்றன. வெளிநாட்டவர்கள் மட்டுமன்றி உள்நாட்டவர்களும் அறுகம்பே பகுதிக்கு அதிகளவில் சுற்றுலாப் பயணிகளாக வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், இப்பகுதி மக்கள், கொவிட் - 19 பெருந்தொற்று, பொருளாதார மற்றும் இயல்பு வாழ்கையில் ஏற்பட்ட பாதிப்பு போன்றவை காரணமாக உல்லாச பிரயாணிகளின் வருகை குறைந்தமையால், தமது வாழ்வாதாரத்தை இழந்து வெளிமாவட்டங்களுக்கு தற்காலிகமாக சென்றிருந்தனர். தற்போது நாடு மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பி வருவதால், இடம்பெயர்ந்து சென்றவர்கள் மீளவும் குடியேறி, தமது ஜீவனோபாய தொழிலை உல்லாச பிரயாணிகளுடன் இணைந்து கொண்டு செல்கின்றனர். இன்று, இலங்கையின் கிழக்கு மாகாண மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பல பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தளங்கள், களை கட்ட ஆரம்பித்துள்ளன.

திருகோணமலை மாவட்டத்தின் நிலாவெளிக் கடற்கரை, மாபில் கடற்கரை, திருகோணஸ்வர ஆலயம், கண்ணியா சுடுநீர் கிணறு போன்ற பிரதேசங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாசிக்குடா, அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில், உல்லை, அருகம்பை ஆகிய பிரதேசங்கள் பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தளங்களை நாடி, உல்லாச பிரயாணிகள் படையெடுத்துள்ளனர்.

மேலும், இச்சுற்றுலாத்தளங்கள் அபிவிருத்தி செய்யப்படாமலும், இத்தளங்களுக்குரிய முறையான போக்குவரத்து கட்டமைப்பு உருவாக்கப்படாமலும் காணப்படுவதனால் இத்தளங்களை நோக்கிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறிப்பிட்டுச் சொல்லத்தக்களவு வளர்ச்சியடைந்ததாகக் காணப்படவில்லை.

எதிர்காலத்தில் இப்பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு, போக்குவரத்துக் கட்டமைப்புக்களும் முறையாக நடைமுறைப்படுத்தப்படுமானால் இச்சுற்றுலாத்தளங்களினூடாக பிரதேச இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பைப் பெற காரணமாக அமையும்.

கிழக்கில் வருமானம் ஈட்டித்தரக் கூடிய துறையாக காணப்படும் உல்லாசத் துறையை, அபிவிருத்தி செய்வதிலும் உல்லாசப் பயணிகளைக் கவர்வதிலும் கடந்த காலங்களில் முழுக் கவனம் செலுத்தி வந்தாலும், அதற்கான விரைவானதும் திருப்பதிகரமானதுமான போக்குவரத்துக் கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை.

உலகிலுள்ள கடற்கரைப் பிரதேசங்களை அண்மித்த குடா பகுதிகளில் மிகவும் இயற்கையான குடாவாக அறுகம்பைக்குடா இருப்பதாக வெளிநாட்டு பயண கையேடுகளில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனுடன் இணைந்ததாக சர்வதேச ரீதியில் கடலலைச் சறுக்கு விளையாட்டுக்கு மிக பொருத்தமான இடமாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளுடன் தென்பகுதி மீனவர்களின் வருகை இப்பகுதியில் மிகுதியாக காணப்படுவதால், பதப்படுத்தப்படாத புத்தம்புதிய கடலுணவுகளை சுவைப்பதில் வெளிநாட்டவர்களுடன் உள்ளூர் மக்களும் ஈடுபட்டுள்ளதை காணமுடியும்.


தற்போது இங்கு வருகை தந்துள்ள உல்லாசப் பயணிகளில் பெரும் பகுதியினர் தமது குழந்தைகளுடன் குடும்பமாக வருகை தந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. மாலை வேளைகளில் அறுகம்பை குடா கடற்கரை நீர்ச் சறுக்கு விளையாட்டு, படகுச் சவாரி, கடற்குளியல், மீன்பிடி என களைகட்டியிருக்கும். உள்ளூர் பயணிகள் தமது வாகனங்களை நிறுத்துவதில் பாரிய இடநெருக்கடியினை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

அறுகம்பைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இக்கடற்கரைப் பகுதியை மட்டும் அனுபவிப்பது கிடையாது. இதனை அண்மித்துள்ள குமண பறவைகள் சரணாலயத்துக்கும் சென்று வருகின்றார்கள்.

அறுகம்பையிலிருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள உகந்தை முருகன் ஆலயத்தின் பின்புறமாகவே குமண சரணாலய பிரதான நுழைவாயில் அமைந்துள்ளது. உல்லாசப் பயணிகள் சரணாலயத்துக்குச் செல்வதற்கு முன்னர் உகந்தை முருகனை தரிசித்து, புகைப்படம் பிடித்து அவரது அருளைப் பெற்றுக் கொள்வதுடன் கூட்டம் கூட்டமாக வலம்வரும் மான், மயில் கூட்டங்கள், பட்சிகளின் ஓசைகளை அனுபவிப்பவர்களாகவும் உள்ளார்கள் என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

# மடுமாதா மகிமை

**திங்கட்கிழமை (15) மடுமாதா திருவிழா**





**சுப்பிரமணியம் பாஸ்கரன்**











இனம், மதம், மொழி கடந்து ஒன்றாய் எல்லோரும் வழிபடும் புனித தலங்களில் மடுமாதா திருத்தலமும் ஒன்றாகும். ஆவணி 15ஆம் திகதி மாதாவின் விண்ணேற்பு திருவிழாவுக்காக இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தும் பல இலட்சம் மக்கள், மடுத்திருத்தலத்துக்குச் சென்று வழிப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டுகளில், இலங்கையில் இடம்பெற்ற தேவாலயங்கள் மீதான குண்டுத்தக்குதல்கள், கோவிட் 19 அச்சுறுத்தல் ஆகியவை காரணமாக, ஆலய விழாக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே நடைபெற்ற காரணத்தால், கடந்த மூன்று ஆண்டுகளாக மடுமாதா திருத்தலத்துக்கு யாத்திரிகர் செல்வது மிக குறைவாக இருந்தது.

இந்த வருடம், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலையேற்றம் மக்களை பாதித்திருந்தலும் அமைதியும் சமாதானமும் வேண்டியும், மத வேறுபாடுகளின்றி கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என பல்லாயிரக்கணக்கான பக்கதர்கள் கிளிநொச்சி, முல்லைதீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து, பாத யாத்திரையாக மடுத் திருத்தலத்துக்கு செல்கின்றனர்.

புதன்கிழமை (10) முதல் யாழ். வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்திலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் கிளிநொச்சியிலிருந்தும் பாத யாத்திரை மேற்கொள்ளும் குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்கள் என பலதரப்பட்ட பக்தர்கள் ஏ-9 வீதி வழியாக பளை - கிளிநொச்சி வழியாக முறிகண்டி சென்று, அங்கிருந்து கொக்காவில் வீதி வழியாக, ஐயன்கன்குளம் ஊடாக மல்லாவி, நட்டாங்கண்டலைச் சென்றடைவார்கள்.

இதேபோல் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால் ஆகிய பல பகுதிகளிலும் இருந்தும், ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதி வழியாக, வவுனிக்குளம் சென்று, நட்டாங்கண்டலைச் சென்றடைவார்கள்.

இவ்வாறு, பலபகுதிகளிலும் இருந்து வரும் பக்தர்கள், நட்டாங்கண்டல் பாண்டியன் குளம் பகுதிகளிலுள்ள வீடுகளிலும் தேவாலயங்களிலும் தங்கியிருந்து, சனிக்கிழமை (13) காலை குறித்த 19 கிலோ மீற்றர் காட்டுப்பாதையை கடந்து, ஞயிற்றுக்கிழமை மாலை, மடு அன்னையின் திருத்தலத்தை சென்றடைந்து பெருவிழாவில் பங்கேற்பார்கள்.

இவ்வாறு யாத்திரை செல்லும் பக்தர்களுக்கு, வருடாந்தம் மேற்படி பாத யாத்திரை செல்லும் வீதிகளில் உள்ள மக்கள், நீராகரங்கள், உணவு, தங்குமிட வசதிகளை வழங்குதல் என பலவழிகளிலும் பலரும் உதவிகளை வழங்குவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இம்முறை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் மடுத்திருத்தலத்துக்கு செல்வதற்காக பல பகுதிகளிலும் இருந்து சென்ற பக்தர்கள், முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பாண்டியன் குளம், நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை தங்கிருந்தனர்.

இவர்களுக்கான உணவளித்தல், நீராகாரங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்படி பிரதேச மக்கள் ஆர்வத்துடன் முன்னெடுத்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார பிரச்சினைகள் நீங்கவும், நாட்டு மக்கள் அனைவரும் சுபீட்சமாக வாழவும் பிரார்த்தனை செய்வதாக பாத யாத்திரையில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

மடு அன்னையின் திருத்தலத்தில் நடைபெறவுள்ள திருவிழாவுக்காக வருடாவருடம் இன, மத, பேதமின்றி பலரும் பல்வேறு நேர்த்திக்கடன்களை வைத்து, பாதயாத்திரை செல்வது வழமை.

மடுத்திருத்தலமானது தமிழ், சிங்கள மக்களின் புனித வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது. உள்நாட்டுப் போர் தொடங்கியதில் இருந்து, இத்திருத்தலத்துக்குச் செல்வோரின் தொகை, பல மடங்கு குறைந்த நிலையில் காணப்பட்டது.

நானும் எனது பெற்றோர் உறவினர்கள், 1990ஆம் ஆண்டு வவுனியா, செட்டிகுளம் பகுதியிலிருந்து யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து, மடுதேவாலயத்துக்குச் சென்று தஞ்சமடைந்து, நான்கு ஆண்டுகள் தங்கியிருந்தோம். பல தொண்டு நிறவனங்களின் உதவியும் அன்னையின் அரவணைப்பும் எல்லோருக்கும் பேருதவியாக இருந்தன.

போரின் தாக்கத்தால் இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள், இத்திருத்தல சுற்று வட்டாரத்தில், அந்தக் காலப்பகுதியில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்தனர்.

இலங்கையின் வடக்கே, மன்னார் மறைமாவட்டத்தின் மடு என்ற புனித இடத்தில் இத்தீருத்தலம் அமைந்துள்ளது. சுமார் 400 வருட பழைமையான மடு அன்னையின் திருத்தலமானது, போர்த்துக்கேயரின் வருகையின் பின்னர் 1544ஆம் ஆண்டில் மன்னாரைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் தற்போதைய மடுத் திருத்தலப் பகுதியில் ஒரு சிறிய அன்னை மரியாள் உருவத்தை வைத்து வணங்கியுள்ளன.

அதன் பின்னர், 1583ஆம் ஆண்டில் மேலும் சில கிறிஸ்தவர்கள் இனைந்து ஒரு சிறிய தேவாலயத்தை இவ்விடத்துக்கு அருகில் கட்டினர்.

'மண்மாதா' என்று அழைக்கப்பட்ட இதுவே, மடுமாதாவின் முதல் வீடாக இருந்தது. 1656 ஆம் ஆண்டில் டச்சுக்காரர் கொலனி ஆதிக்கத்தைத் தொடங்கிய போது, கத்தோலிக்கரை துன்புறுத்தியதாக வரலாறு கூறுகிறது.

அப்போது புகலிடம் தேடிய 30 வரையான கத்தோலிக்க குடும்பங்கள் தங்களுடன் மடு அன்னையின் திருவுருவத்தை எடுத்துச் சென்று, 1670ஆம் ஆண்டில் மருதமடு என்ற இடத்தில் வைத்தது வழிபட்டனர் என்று வரலாறு கூறுகின்றது. இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தும் இந்தத் திருத்தலம் நோக்கி பல நூற்றாண்டுகளாக பாதயாத்திரை மேற்கொள்வது ஒர்மகிமையாகக் கருதப்படுகின்றது.

# சீனா – இந்திய ஆதிக்க போட்டிக்குள் இலங்கை சிக்கக் கூடாது

'கையில் கல் கிடைக்கும் வரை நாயுடன் பேச்சுவார்த்தை நடத்துவதே உலக நாடுகளில் இன்று பின்பற்றப்படுகின்ற இராஜதந்திரம்' என்று சொல்வார்கள். இவ்வாறான இராஜதந்திர நகர்வுகள் மற்றும் சர்வதேச உறவுகளை கவனமாகக் கையாள்வதில், இலங்கை இன்னும் கற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பதாகவே தெரிகின்றது.

இப்போது, சீனாவின் ஆய்வுக் கப்பலான 'யுவான் வங்க் 5' ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதி அளிக்கப்பட்டமையும் அதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்திருந்தமையும், அதையும் பொருட்படுத்தாமல் சீனா செயற்படுகின்றமையும் இலங்கைக்கு ஒரு புதிய தலையிடியை உருவாக்கியுள்ளது.

இலங்கையில் கப்பல்கள், தொடர்ந்து பேசுபொருளாக இருந்து வருகின்றன. தீப்பிடித்த கப்பல்கள், சேதனப் பசளை என்ற பெயரில் ஆபத்தான குப்பைகளை ஏற்றிவந்த கப்பல், கட்டணம் செலுத்த டொலர் இல்லாத எரிபொருள் கப்பல்கள் என இது தொடர்ந்தது. இப்போது சீனாவில் இருந்து வருகின்ற கப்பலை நிறுத்துவதற்கான திராணி கூட, இலங்கைக்கு இல்லாது போயுள்ளதால், இது எல்லாவற்றையும் விட ஆபத்து நிறைந்த சர்ச்சையாக உருவெடுத்துள்ளது. உலக வரைபடத்தில், இலங்கையின் புவிசார் அமைவிடம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உள்நாட்டு முரண்பாடுகள், அரசியல் குழப்பங்கள், பொருளாதார நெருக்கடிகள் இலங்கை மீது கண்வைத்துள்ள நாடுகளுக்கு களத்தை மேலும் சாதமாக்கிக் கொடுத்திருக்கின்றன.

எந்தவொரு வெளிநாட்டின் உதவிகள், கொடுக்கல் வாங்கல்களுக்குப் பின்னாலும் அந்தந்த நாடுகளின் சொந்த எதிர்பார்ப்புகள் இருக்கவே செய்கின்றன. இந்தப் பின்னணியில், அதிநவீன கண்காணிப்பு வசதிகளைக் கொண்டுள்ள சீனக் கப்பல், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தரித்து நிற்பது, இந்தியாவுக்கு ஆபத்தாக அமையும் என்றும் இதைத் தடுத்து நிறுத்துமாறும் இந்தியா, இலங்கையை கோரியது.

இதே கோரிக்கையை, அரசாங்கமும் சீனாவிடம் முன்வைத்தது. ஆனால், "இந்தியா இதில் மூக்கை நுழைக்கக் கூடாது" என்ற தொனியில் சீனா கருத்துரைத்துள்ளது.

இந்நிலையில், கப்பலின் வருகையில் ஓரிரு தினங்கள் தாமதம் ஏற்பட்டுள்ளதே தவிர, இலங்கையின் கோரிக்கையை சீனா செவிமடுத்ததாக தெரியவில்லை.

சீனா, இலங்கையின் அபிவிருத்திக்காக கடன்களை தந்துள்ளது. மறுபுறத்தில், இந்தியா நமது அயல்தேசம் என்பதுடன் அண்மைக்காலத்தில் கணிசமான உதவிகளையும் வழங்கியிருக்கின்றது.

இந்தப் பின்னணியில், சீனாவால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட துறைமுகத்துக்கு அந்நாட்டுக் கப்பல் வருவதை இலங்கை ஆரம்பத்தில் சாதாரணமாக எடுத்துக் கொண்டாலும், பாகிஸ்தான் கப்பலொன்று கொழும்புக்கு வந்துள்ள சமகாலத்தில் சீனாவின் கண்காணிப்புக் கப்பல் ஹம்பாந்தோட்டைக்கு வருவதை இந்தியா நல்ல சகுணமாக பார்க்கவில்லை.

இவ்விரு நாடுகளினதும் நிலைப்பாடுகளில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், எந்த அடிப்படையிலோ தமக்கிடையேயான அதிகார போட்டியின் களமாக, இலங்கையை பாவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கத்தின் அனுமதியின்றி, சீனக் கப்பல் ஹம்பாந்தோட்டையில் நங்கூரமிடுமாயின் இன்னும் நிலைமைகளைச் சிக்கலாக்கும். இதன் தொடர் விளைவுகளால் பாதிக்கப்படப் போவது இலங்கை மக்களே. ஆகவே, இராஜதந்திர ரீதியாக இதனை சரிவரக் கையாள்வதள் மூலம், இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான அதிகார, ஆதிக்க போட்டியின் நடுவே சிக்கிக்கொள்ளாமல் இலங்கை அரசாங்கம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# ஜெனீவாவுக்கு முன்னரான குழப்பம்

**லக்ஸ்மன்**

தமிழர் தேசிய தரப்பில் எப்போதும் குழப்பம். இதில், புதிதான குழப்பம் ஏதுமில்லை. ஆனால், குழப்பம் குறைய வழி என்ன என்று கேட்டால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பரஸ்பர விட்டுக்கொடுப்பும் உட்கட்சி ஜனநாயகமும் பேணப்படவேண்டும் என்பதாகவே பதில்அமைகிறது.

தாய்க்கட்சி, தலைமைக்கட்சி, சின்னத்தின் கட்சி என்கின்ற ஆதிக்கத்தனங்களும், ஆயுதக்குழுக்கள், ஆயுத இயக்கங்கள், ஜனநாயக நடைமுறைக் கட்சி எனப் பல கருத்து நிலைப்பாடுகளும் இந்தக் குழப்பங்களுக்குக் காரணங்களாக அமைகின்றன.

தனிப்பட்ட அரசியல் அபிலாஷைகளை மறந்து, ஒற்றுமையாக தமிழ் மக்களுக்காக போராட வேண்டிய நேரம் இது. ஒவ்வொரு கட்சிக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் தங்களது கட்சி மீது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகள் இருக்கும்; இதை மறுப்பதற்கு இல்லை.

இருந்தாலும், தற்காலத்தில் தமிழ் மக்களின் சூழ்நிலை கருதி, அவைகளை விடுத்து மக்களுக்காகவே கட்சி; கட்சிக்காக மக்கள் இல்லை என்பதை மனதில் நிலைநிறுத்தி, ஒற்றுமையாக செயற்படுவோம் என்கின்ற கோசம் நீண்ட காலமாகவே ஒலிக்கின்ற கோசமாக இருந்தாலும், அது தமிழர்களிடம் எந்த அளவுக்கு செயற்பட்டிருக்கிறது?

முள்ளி வாய்க்கால் அவலத்தின் பின்னர், தமிழர்களின் நிலை ஆப்பிழுத்த குரங்கின் நிலை போலாகி விட்டது. அன்றைய நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் ஒரு பலமேனும் இருந்தது. ஆனால், இப்பொழுது வெறுமனே எங்களது ஜனநாயக உரிமை என்ற கோசத்துடன் முயற்சிக்கிறோம்.

அதாவது, செப்டெம்பர் 11 நியூயோர்க் தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட சர்வதேச கருத்து நிலை மாற்றம் குறிப்பாக, அமெரிக்கா மற்றும் அமெரிக்க சார்பு மேற்குலக மாற்றங்கள், இந்தியப் பிரதமர் ராஜீவ் மரணத்தின் பின்னராக இந்திய அரசின் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டு மனநிலை மாற்றம், தமிழர்களின் போராட்டத்தை 'விடுதலைப் போராட்டம்' என்ற கருத்து நிலையிலிருந்து 'பயங்கரவாத செயற்பாடு' என்ற அர்த்தத்துக்கு இட்டுச் சென்றது.

சர்வதேச ரீதியாக ஏற்பட்ட இம் மாற்றங்களை இலங்கை அரசு வெற்றிகரமாக தனக்குச் சாதகமாக்கி மேற்கு, கிழக்கு உட்பட வல்லரசு நாடுகளின் ஆயுத உதவி, ஆலோசனைகளின் ஊடாக, சர்வதேச ஆதரவுடன் கண்மூடித்தனமாக தாக்கியழித்து 2009, மே 19ஆம் திகதி முள்ளிவாய்காலோடு தமிழர் தரப்பின் ஆயுதப் போராட்டத்தை மௌனிக்கச் செய்து விட்டது. இதில் இலங்கை அரசு பெருமையும் கொண்டது.

இலங்கை வந்த சர்வதேச சாடுகளின் அரச உயர்மட்டத்தினரிடம், "புலிப் பயங்கரவாதத்தை ஒழிக்க உதவுங்கள்; பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டபின்னர் 13 மட்டுமா, 13 பிளஸ் இல்லை 13பிளஸ் பிளஸ் கொடுப்போம், ஏன் ஈழம் தவிர்ந்த எல்லாம் கொடுப்போம்" என்று கூறிய அரசாங்கம், வெறுமனே பொருளாதாரப் பிரச்சினையாக்கி, எலும்புத்துண்டு கொடுத்தால் போதும் என்ற நிலையாக்கிவிட்டது.

அதன் தொடர்ச்சியான வேலைகளை, இலங்கை அரசாங்கம் விட்டுவிடவில்லை. செப்டெம்பரில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடரிலும் தமக்குச் சாதகமான நிலையையே, அரசு உருவாக்கிக் கொள்ளும்.

தமிழர் தரப்பின் குத்தல் குடையல், பிய்த்தல், பிடுங்கல்கள் என்பன பேரினவாதத்துக்குச் சாதக தன்மையையே உருவாக்குகிறது. கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முழுமையான ஆதரவுடன் ஐக்கிய நாடுகள் சபையை எதிர்கொண்டு, அனுசரணையையும் செய்து சமாளித்துக் கொண்டது.

அதன் பின்னர் வந்த அரசாங்கம், அனுசரணையிலிருந்து விலகிக் கொள்ளும் நிலைப்பாடு வரை சென்றது. இப்போது மற்றுமோர் அரசாங்கம் அதற்குள் வெளிக்காட்டப்படும் சர்வகட்சி அரசாங்க என்கிற முயற்சி. இவ்வாறு காலத்தை இழுத்துக் கொண்டே, இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழர்களின் காலம் வீணடிக்கப்பட்டுவிட்டது.

காலங்கடத்தல் மூலம் ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கும், கோரிக்கைகளுக்கும் தீர்வு வழங்காமல் நிகழ்த்தப்படும் உரிமை மறுப்பை, என்ன பெயர் சொல்லி அழைக்கமுடியும்.

முள்ளி வாய்காலின் பின்பு தான் அமெரிக்கா உட்பட மேற்குலகமும் அதன் அமைப்புகளும் இலங்கையின் பேரினவாத கோரமுகத்தை அறிந்து கொண்டன. யுத்தம் நடந்த போது, உதவிய நாடுகள் இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு என்பவற்றை மதித்ததாக கூறிய இலங்கை அரசு, யுத்தம் முடிந்த பின்னர் இலங்கையின் ஆட்சியைக் கவிழ்ப்பதக்கும் இறைமை, ஒருமைப்பாடு என்பவற்றுக்கு எதிராகவும் செயற்படுவதாக ஒப்பாரிவைக்கின்றமையையே காண்கிறோம். இந்த வினோத அரசியல் நிலையே, இன்றைய யதார்த்தம் கொஞ்சமேனும் புதிய ஜனாதிபதியின் அழுத்தங்களால் இம்முறை மாறலாம்.

ஒவ்வொரு தடவையிலும் ஜெனீவா கூட்டத்தொடர், மனித உரிமைகள் பேரவை அமர்வு போன்றவைகள் தொடங்குகின்ற வேளைகளில், தமிழர் பக்கமிருந்து ஓர் எழுச்சி உருவாவதும் அக்கூட்டங்கள் நிறைவடைந்ததும் சலிப்பு மனோநிலையுடன் அலுத்துப் போவதும் வழமையானதே.

ஐக்கிய நாடுகள் சபையில், ஒரு நாடு இல்லாத ஈழத் தமிழர்கள், தங்களுக்கான கோரிக்கைகளை முன்வைப்பதற்கே முடியாது என்ற கருத்துகள் இப்போதுதான் பரவி வருகின்ற நிலையில், நமக்காக குரல் கொடுப்பதற்காக உலகின் ஏனைய நாடுகளைத் திரட்டும் பணியை ஏற்கெனவே தொடங்கி இருந்தாலும் அது தொடரவேண்டும். அதற்காக, தமிழர் தரப்பின் அரசியல் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைந்து முயற்சிக்கவேண்டும்.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில், ஆட்சி மாற்றங்கள், அரசியல் குழப்பங்கள் நடைபெற்ற வண்ணமே இருக்கிறது. அவ்வேளைகளிலும் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திடம் காலம் தாழ்த்தலைக் கேட்கின்றது. அதே நேரத்தில், இப்போதைய நிலையில், கொவிட் பரவல், பொருளாதார நெருக்கடியால் உருவான அரசில் குழப்பங்கள், அரசாங்கத்தின் ஸ்திரமற்ற நிலை, பிரச்சினைகளை ஜெனீவாவில் காரணமாகக் காட்ட இருக்கிறது. இருந்தாலும் தமிழர்களைப் பொறுத்தவரையில், முன்வைப்பை நேரடியாக மேற்கொள்வதற்கே முடியாத நிலையே காணப்படுகிறது.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்யுங்கள் என்று இந்திய அரசாங்கத்துக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பட்டபாடு பெரும் பாடாக இருந்தது. அதற்கு என்ன நடந்ததென்று இதுவரையும் தெரியாமலேயே இருக்கிறது.

அதற்கு முன்னர் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையின் அமர்வுக்கு தமிழ்த் தேசிய தரப்பாக ஒருமித்த கடிதத்தை அனுப்புவதற்கு முயற்சிக்கப்பட்ட வேளை, பெரும் பிரச்சினைகளே ஏற்பட்டிருந்தன. அதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு நிலைப்பாட்டையும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேறு ஒரு விதமான நிலைப்பாட்டுடனும் கடிதங்களை அனுப்பின. இன்னும் பல கடிதங்களும் சென்றன.

அதன் பின்னர் தங்கள் தங்களது அரசியல் குழப்பங்களுக்குள் சங்கமமாகிவிட்டன. தனிப்பட்ட அரசியல் கால அட்டவணைகளை தேர்தல்களுக்காக மாத்திரம் வைத்துக் கொண்டு, தமிழர்களின் தேசிய நலனுக்காக ஒரு திட்டவட்டமான திடமான கால அட்டவணையை ஏற்படுத்துவற்கு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுடன் இருக்கின்ற கட்சிகள் முயலவேண்டும். இதனை யார் முன்நின்று நடத்துவது என்பது முக்கியமற்றதாக இருத்தலேசிறப்பு. காழ்ப்புணர்ச்சிகள் விட்டொதுக்கப்படவேண்டும். இதில் சர்வதேச நாடுகளில் இயங்குகின்ற அமைப்புகளும் இணைக்கப்படவேண்டும்.

கால அட்டவணை என்பதும் நிறுத்தப்படாத நோக்கத்துக்கான செயற்பாடும் முக்கியமானதாகும். அதனை விடுத்து குழப்பங்களும் கோபங்களும் தமிழர்களுக்கு கிடைக்கவேண்டிய தீர்வை இன்னும் எத்தனை தசாப்தங்களுக்கு இழுத்துச் செல்லப்போகிறது என்ற அச்சத்தை கட்சிகள் மனங்கொள்ளவேண்டும். அதற்காக தேவையற்ற பல விடயங்கள் புறமொதுக்கப்படல் நல்லதே.

இன்று அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படும் சர்வகட்சி அரசாங்கம், புதிய அரசியலமைப்பு மாற்றம் போன்றவைகளெல்லாம் நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு சரியான தீர்வைத் தரப்போவதில்லை என்ற நிலைப்பாட்டிலிருந்து கொண்டே முயலுதலும் வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ காலத்தில் மங்கள முனசிங்க தலைமையில் ஒரு பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. அப்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தீர்வுக்கு ஓர் அடிப்படையாக அமையலாம் என்ற சிந்தனை காணப்பட்டாலும், ஓரளவு வலுவான ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வுப் பொதியும் கூட காணாமலாக்கப்பட்டதே இலங்கையின் வரலாறாகும். சிறுபான்மைக் கட்சிகளைப் புறக்கணித்து, பெரும்பான்மையினத்தில் சிறுபான்மையினர் தொடர்பான ஆதரவு நிலைப்பாடு கொண்டவர்களைப் புறக்கணித்து, சிங்கள பௌத்தவாதிகளை மட்டும் உள்ளடக்கிய நடவடிக்கைகளுக்கு மாறாக, சர்வதேசத்தை ஏமாற்றவும் காலம் கடத்தவுமான முயற்சியொன்றும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதற்கு வெளிவிவகார அமைச்சராக இருக்கின்ற அலி சப்ரியைச் சுட்டலாம். இன்றைய சிறுபான்மை இன அரசியல் நிலைமைகள், எரிகிற வீட்டில் புடுங்கியது இலாபம் என்பதே. இதுவே இன்றைய சிறுபான்மைக் கட்சிகளின் யதார்த்தமும் கூட. இதிலிருந்து மாற்றத்தைக் கண்டு, தமிழ் மக்களுக்கான சுதந்திர வாழ்க்கைக்காக முயல்தல் சிறப்பு.



## வாழ்வியல் தரிசனம்

கடன்பட்டு கடன்பட்டே வாழ முடியாது. இதனால் நிம்மதியே இல்லாமல் போய்விடும். வட்டிக்குக் கடன் வழங்கினால், அதுவே ஒருவரை அதளபாதாளத்தில் இறக்கிவிடுவதைவிட மோசமான விளைவுகளைத் தரும்.

கடன்களைப் பெறுவதாலர், சேர்த்துவைத்த செல்வம், வாழ்ந்த வீட்டைக்கூட இழக்க வேண்டி ஏற்படும். சிக்கனமாக வாழ்ந்தால் துன்பம் இல்லை.

எமது நாட்டின் நிலையும் இதே போன்றதாகும். கடன் பெற்றால் அதைத் திருப்பிக் கொடுக்கும் திறன் வேண்டும். வெறும் கையுடன் பணம் இன்றி வாழ்வது எப்படி? இன்று நாடு பெரும் பிரச்சினைக்குள் சிக்குவதற்கு இதுவே காரணம். எவருமே தங்கள் பணத்தைப் பெருக்கிக்கொள்ளவே கடன் வழங்குகின்றனர்.

எமது மக்கள் உழைக்கும் பணத்தில், சிறு தொகையையாவது வங்கிகளில் வைப்பில் இடவேண்டும். எதிர்காலம் பற்றி உணராமல், வரவைவிட செலவை அதிகம் செய்கின்றனர்.

செய்தொழிலில் முன்னேற்றங்களை உருவாக்குங்கள்! நிமிர்ந்து வாழ எவரிடமும் கடன்பெறலாகாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதி:

### ஒடுக்கமான பாலம் ஆபத்தான நிலையில்

பிரதான போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றான சாய்ந்தமருது பழைய ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தோணாவுக்கு மேலாக, குறுக்காக அமைக்கப்பட்டுள்ள ஒடுக்கமான பாலம், பல தசாப்தங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்த நிலையில், பாவனைக்கு உகந்ததற்றதாக மாறியுள்ளது.

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாலத்தின் ஊடாக, சாய்ந்தமருது பழைய ஆஸ்பத்திரி உப தபாலகம், கமு/ கமு/ றியாலுல் ஜன்னா வித்தியாலயம், அஷ்ரஃப் ஞாபகர்த்த பூங்கா, பள்ளிவாசல், பாதுகாப்பு படை தளம், மீனவர்களின் தொழில் நிமிரத்தமான பயணங்கள் என்பனவற்றுக்கு செல்ல வேண்டும்.

இப்பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்டு வருகின்ற மக்கள் பிரதிநிதிகள், இப்பிரச்சினைக்கு தீர்வை தருவதாக தேர்தல் காலங்களில் மேடைகளில் வாக்குறுதி வழங்கினாலும் கூட, அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் பலரும் பல்வேறு காரணங்களை கூறிவருகின்ற நிலையில், தமக்கான உச்சக்கட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க முன்வரவேண்டும் என சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

நூருல் ஹுதா உமர்





# மாட்டிறைச்சி அரசியல்





நூருல் ஹுதா உமர்

நாட்டில் இப்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக, மூச்சுவிடுவதாக இருந்தால் கூட, சாதாரண ஒருவருக்கு தினம் 5,000 ரூபாய்க்கு மேல் தேவை எனும் நிலை உருவாகியுள்ளது. அதில் பல்வேறு மாபியாக்களும் மனசாட்சி இல்லாதவர்களின் செயல்களும் ஆதிக்கம் செலுத்துகிறன.

இப்படியான மாபியா கடலிலில் ஒரு துளி போல், அம்பாறை மாவட்டத்தில் சில நாள்களாக பேசுபொருளாக மாறியிருக்கும் இறைச்சி விலை பிரச்சினையை ஆராய்ந்தால், பல்வேறு இடியப்ப சிக்கல்களையும் அதிகார வர்க்கத்துக்கும் வர்த்தகர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளையும் காணக்கூடியதாக உள்ளது.

சொந்தமான விலங்கறுமனையையோ அல்லது சொந்தமான இறைச்சிக்கடைகளையோ கொண்டிராத கல்முனை மாநகராட்சி, இறைச்சி விலையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. அதன் பகுதியாக, கல்முனை மாநகராட்சி ஆள்புல எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில், ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சியின் அதிகூடிய கட்டுப்பாட்டு விலையாக 1,600 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மாநகர சபை தரப்பு, நாட்டின் அசாதாரண சூழ்நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, கல்முனை மாநகர பிரதேசங்களில் ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சி 2,200 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறது. இதனடிப்படையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைய, கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தது.

இவ்விடயம் தொடர்பாக, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி விற்பனையாளர்கள், மாநகர மேயரால் மாநகர சபைக்கு நேரடியாக அழைக்கப்பட்டு, இறைச்சி வியாபாரத்தின்போது அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், செலவீனங்கள் குறித்து கேட்டறியப்பட்டு, அவற்றுக்குரிய தீர்வுகள் முன்மொழியப்பட்ட நிலையில், அவர்களது இணக்கத்துடன் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சி 1,600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அதில் ஆகக் கூடியது 200 கிராம் மாத்திரமே முள் அடங்கியிருத்தல் வேண்டும் எனவும் அனைத்து இறைச்சிக் கடைகளிலும் டிஜிட்டல் தராசு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அதே வேளை, இறைச்சிக் கடைக்காரர்களுக்கு மாடுகளை விற்பனை செய்வோர் மாநகர சபையில் தம்மைப் பதிவு செய்து, அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஒரு கிலோ கிராம் இறைச்சியை ஆகக்கூடியது 1,300 ரூபாய்க்கு வழங்க வேண்டும் எனவும் மேயரால் உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இதனை மீறும் மாட்டு வியாபாரிகள் பொலிஸார் மூலம் கைது செய்யப்பட்டு, கடுமையான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன், மாடுகளும் பறிமுதல் செய்யப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இம்மாதம் ஐந்தாம் திகதிவரை 2000- 2200 ரூபாய் வரை கல்முனை மாநகர எல்லைக்குள் இறைச்சி விற்கப்பட்டதுடன் ஆறாம் திகதி முதல் பெரும்பான்மையான இறைச்சி கடைகள் மேயரின் அறிவிப்பின் காரணமாக மூடப்பட்டுள்ளது. கடைகளை மூடியமைக்கு காரணம், மேயரால் குறிக்கப்பட்டுள்ள விலைக்கு இறைச்சியை விற்க முடியாது என்கின்றனர் இறைச்சி கடைக்காரர்கள்.

இறைச்சி விலை ஏன் அதிகரிக்கின்றது என்ற கேள்விக்கு, விடை தேட வேண்டியது இறைச்சிக் கடைக்காரர்களைத் தாண்டி, இறைச்சிக் கடைகளைக் குத்தகைக்கு விடுவோரின் கைகளிலும் தங்கியுள்ளது. பல லட்ச ரூபாய்களுக்கு கடைகளைக் குத்தகைக்கு விட்டால், நாளுக்கொரு விலையை அவர்களும் அதிகரிப்பதில் நியாயமும் இல்லாமல் இல்லை. அவ்வாறான தொகைக்குக் குத்தகைக்கு விட்டுவிட்டு, விலையைப்பற்றிப் பேசுவதில் நியாயமும் இல்லை.

அவ்வாறான பெருந்தொகைக்குக் குத்தகைக்கு பெறும் அவர்கள், அவர்களது வாழ்வாதாரம், இலாபம், அடுத்த முறை குத்தகைக்குப் பெறுவதற்கான பணத்தைச் சேகரித்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதால் விலை அதிகரிப்பு ஏற்படுகின்றதே தவிர, இங்கு டொலர் தட்டுப்பாட்டால் விலை அதிகரிக்கப்படுவதில்லை.

இந்நிலையில், மாற்றம்பெற வேண்டுமானால் முதலில் குத்தகையை நிர்ணயம் செய்து, குறிப்பிட்ட ஒரு சிறு தொகைக்குக் குத்தகைக்குக் கடையை வழங்கி விட்டு, கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்தால் மக்களும் கடையைக் குத்தகைக்கு எடுத்தவரும் நன்மையடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

மக்களின் வயிற்றில் அடித்து, கட்டடங்களை கம்பீரமாகக் காட்சிப்படுத்தி என்ன பயன்? மாற்றத்தை எதிர்பார்க்கும் நம்மிடமிருந்து முதலில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற நியாயமான கருத்தொன்று பொதுவெளியில் இந்தப் பிரச்சினைகளின் பின்னர் உலவுகிறது.

இறைச்சி விலை நிர்ணயத்தில், பிராந்தியத்தின் அனைத்து உள்ளூராட்சி சபைகளும் ஒருமித்த ஒரு விலை நிர்ணயத்துக்கு வரவேண்டும். கல்முனையில் ஒரு விலை, அக்கரைப்பற்றில் ஒரு விலை, நிந்தவூரில் ஒரு விலை, அட்டாளைச்சேனையில் ஒரு விலை, சம்மாந்துறையில் ஒரு விலை என இருக்கக்கூடாது.

இதனால் கடந்த காலங்களில் மாட்டு வியாபாரிகளுக்கும் இறைச்சிக் கடைக்காரர்களுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் இடையில் இணக்கப்பாடு இன்மையும், தான்தோன்றித்தனமான விலை அதிகரிப்பும் காணப்பட்டன. எனவே சபை ஒன்றினது இறைச்சி விற்பனையுடன் சம்மந்தபட்ட மாட்டு வியாபாரிகள், கடைகாரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, பிராந்தியத்துக்கான ஒரு விலையை நிர்ணயம் செய்யவேண்டும்.

உண்மையில், நிர்ணய விலைக்கு இறைச்சியை விற்காமல், தமது தீர்மானத்தை மீறும் இறைச்சிக் கடைகளை இழுத்து மூடுவதற்கு, மேயர் தயாராக இருந்தார். அதற்காக ஆறாம் திகதி சனிக்கிழமை, காலை வேளையில் பொலிஸ் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் சகிதம் மேயர் கள விஜயம் மேற்கொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடாகியிருந்தது.

இவைகளெல்லாம் இப்படி இருக்க, இந்த விடயம் தொடர்பில் செவ்வாய்க்கிழமை (09) கல்முனை மேயரின் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கல்முனை பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல்.ஏ.வாஹிட், மாநகர சபை கணக்காளர் எம்.எம்.ரியாஸ், கால்நடை வைத்திய அதிகாரி வட்டப்பொல உட்பட இறைச்சிக் கடைக்காரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு, நீண்ட நேர வாதப்பிரதிவாதங்களை மேற்கொண்டதுடன் ஒரு கிலோ கிராம் மாட்டிறைச்சி (200 கிராம் எலும்பு அடங்கலாக) 1,700 ரூபாய்க்கும் தனி இறைச்சி 1,900 ரூபாய்க்கும் விற்பனை செய்வதற்கு இணக்கம் காணப்பட்டது.

அக்கரைப்பற்று மாநகர சபை எல்லையினுள் நிர்ணய விலைகளிலேயே மாட்டிறைச்சி விற்கப்படுவதை அப்பகுதி வியாபாரிகள் அக்கரைப்பற்று மாநகர சபைக்கு உறுதிப்படுத்தி இருக்கின்றனர். அதேவேளை, அட்டாளைச்சேனையில் இவ்விலையை நடைமுறைப்படுத்த அங்குள்ள மாட்டிறைச்சி வியாபாரிகள் தவறியமையால், அப்பிரதேச சபை சபைத் தவிசாளரினால் அப்பகுதி விலங்கறுமனை இழுத்து மூடப்பட்டிருக்கிறது. ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக இழுத்து மூட, மாநகர சபைக்கு சொந்தமான விலங்கறுமனையோ மாநகர சபைக்கு சொந்தமான இறைச்சிக்கடைகளோ கல்முனையில் இல்லை என்பதே இங்கு கவலையான விடயமாக உள்ளதுடன் கல்முனை மாநகர இறைச்சிக்கடைக்காரர்கள் தமது எண்ணம் போலவே இதுவரையும் வியாபாரம் செய்து வருகின்றனர்.



தனியார் ஒருவருக்கு சொந்தமான விலங்கறுமனைக்கு எதிராக வழக்கொன்றை பதியுமாறு கல்முனை நீதிமன்றம், ஆணையாளரை பணித்திருந்தும் அதனை கூட நிறைவேற்ற முடியாமல் காலம் இழுத்தடிக்கும் கல்முனை மாநகர சபை நிர்வாகம், இறைச்சி விலையில் உச்சகட்ட இறுக்கம் காட்ட முடியாது இருக்க பல காரண காரியங்கள் இருக்கின்றன.

மாட்டிறைச்சி வியாபாரிகளுடனான கலந்துரையாடலில், அவர்களினால் தெரிவிக்கப்பட்ட செலவீனங்கள் தொடர்பாக சம்மந்தப்பட்ட தரப்பினருடன் ஆராய்ந்தபோது, அவை மிகைப்படுத்தப்பட்டவை என தெரிய வந்துள்ளது. குறிப்பாக, மாடு விற்பவர்கள், தங்களுக்கு ஒரு கிலோ கிராம் இறைச்சியை எலும்புடன் சேர்த்து 1,700 ரூபாய்க்கே தருகிறார்கள் என இறைச்சிக்கடை வியாபாரிகள் கூறியிருந்தனர். அப்போது இவ்விலையைக் குறைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் உறுதியளித்ததன் பிரகாரம் வெள்ளிக்கிழமை (05) மாடு வியாபாரிகளை, மாநகர சபைக்கு அழைத்து, பேச்சுவார்த்தை நடாத்தினார். இதன்போது, தாம் மாட்டிறைச்சிக் கடைக்காரர்களுக்கு கிலோவொன்று 1,500 ரூபாப்படியே விற்பதாகவும் அத்தொகைக்கு மேல் அவர்கள் வாங்க மாட்டார்கள் எனவும் ஒவ்வொரு மாட்டிலும் 04 சந்துகள் மாத்திரமே நிறுக்கப்பட்டு, மாட்டுக்கான தொகை தீர்மானிக்கப்படுவதாகவும் ஈரல், குடல் மற்றும் இதர பகுதிகள் யாவும் இறைச்சிக் கடைக்காரர்களுக்கு இலவசமாகவே கிடைக்கின்றன எனவும் மாடு வியாபாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். இவற்றின் மூலம் இறைச்சி வியாபாரிகளுக்கு 10,000 ரூபா முதல் 15,000 ரூபா வரை மேலதிக வருமானம் கிடைக்கிறது எனத் தெரிய வந்துள்ளது.

ஆக, உண்மைகள் மறைக்கப்பட்டு, செலவீனங்கள் அதிகமாகக் காட்டப்பட்டே மாட்டிறைச்சி வியாபாரத்தில் கொள்ளை இலாபம் அடிக்கப்படுகின்றமை நிரூபிக்கப்பட்டுள்ளதால், இந்த மாபியாவை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது என்றும் இந்த விடயத்தில் எத்தகைய விமர்சனங்கள், சவால்கள் வந்தாலும் அவற்றை முறியடித்து ,மக்களுக்கு நியாய விலையில் மாட்டிறைச்சி கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு மாநகர மேயர் அதீத பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றார்.

ஆகையினால், தீர்மானிக்கப்பட்ட விலைகளுக்கு இறைச்சி விற்பதற்கு வியாபாரிகள் முன்வராத வரை, மாட்டிறைச்சிக் கடைகளை திறப்பதற்கோ வேறு வழிகளில் மாட்டிறைச்சி விற்பதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது. இதனால் இன்னும் சில தினங்களுக்கு நுகர்வோருக்கு இறைச்சி கிடைக்காமல் போகலாம். இது விடயத்தில் சகிப்புத்தன்மையுடன் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம், இந்த மாபியாவை முறியடிக்கும் சவாலை ஒன்றிணைந்து வெற்றி கொள்வோம் என்கிறது கல்முனை மாநகர சபை.

அம்பாறை மாவட்ட காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, இறக்காமம், சம்மாந்துறை, நாவிதன்வெளி, பொத்துவில் போன்ற பிரதேச சபைகளிலும் இந்த மாட்டிறைச்சிக்கான நிர்ணய விலை இல்லாத பிரச்சினை தொடர்கிறது. ஏன், அம்பாறை மாவட்ட பிரதேச சபைகளின் பிரதேசத்தில் மாத்திரம் கண்முடித்தனமாக இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றது. இதுவரை பிரதேச சபைகள் கவனம் கொள்ளாமல் இருப்பதன் காரணம் என்ன? இனியாவது பிரதேச சபைகள் இதனை கவனம் கொள்ளுமா? எனும் கேள்விகள் பரவலாக எழ ஆரம்பித்துள்ளன.



# அலைகளில் மிதக்கும் போதை

## இலங்கை, இந்திய மக்களின் மாபெரும் எதிர்பார்ப்பு



வ. சக்திவேல்
shagthivel@gmail.com

கடல்மார்க்கமாக நாடுகளுக்கிடையே சட்டரீதியான வியாபார போக்குவரத்துக்களும் ஏற்றுமதி, இறக்குமதிகளும் இடம்பெற்று வருகின்றன. இவற்றுக்கிடையில், சட்டவிரோதமான முறையில் பொருட்கடத்தல்களும், குறிப்பாக போதைப் பொருட்கள் கடத்தல்களும் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், இலங்கைக்கு அண்மையிலுள்ள இந்தியாவிலிருந்து இவ்வாறாக போதைப்பொருட்கள் உள்ளிட்டவைகள், சட்டவிரோமாக கடல்வழியாக எடுத்தவரப்படுகின்றது.

பாக்குநீரிணையின் தமிழக கடற்பகுதியில் அண்மையில், அடுத்தடுத்து கஞ்சா மூட்டைகள் கரை ஒதுங்குவது குறித்து, இந்திய உளவுத்துறை அதிகாரிகள் நடத்திய இரகசிய விசாரணையில், தமிழக கடலோரப் பகுதியில் இருந்து இலங்கைக்கு படகில் கஞ்சா கடத்தி வந்தபோது, நடுக்கடலில் படகு மூழ்கியதில் படகில் இருந்த கஞ்சா மூட்டைகள் கரை ஒதுங்கி வருவதாக தகவல் வெளியாகியிருந்தது.

இலங்கைக்கு மிகஅருகாமையிலுள்ள தூத்துக்குடி, இராமநாதபுரம், நாகை, புதுக்கோட்டை உள்ளிட்ட கடலோர பகுதிகளில் இருந்து, சட்டவிரோதமாக இலங்கைக்கு கஞ்சா, சமையல் மஞ்சள், கடல்அட்டை, கடல்குதிரை, திமிங்கலஇறகு, ஐஸ்போதை பொருள் உள்ளிட்டவைகள் அதிகளவு கடத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தல் சம்பவங்களை தடுப்பதற்காக இந்திய - இலங்கை கடற்படை, சர்வதேச கடல் எல்லையில் பாதுகாப்பு பணியை தீவிரப்படுத்தி உள்ள நிலையிலும் கடத்தல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், அண்மையில் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள், நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது, வலையில் சுமார் 30 கிலோ கஞ்சா பொட்டலங்கள் சிக்கியிருந்தன. அதை மீனவர்கள் எடுத்து வந்து, விற்பனை செய்ய முற்பட்டுள்ளனர். இது குறித்து தகவல் அறிந்த தமிழக பொலிஸார், ஏழு பேரை கைது செய்துள்ளனர்.

கடந்த வாரம் இந்திய கடலோர காவல் படையினர், தனுஷ்கோடியை அடுத்த மூன்றாம் மணல்திட்டு பகுதியில், ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, அப்பகுதியில் கரை ஒதுங்கி கிடந்த சாக்கு மூட்டையை சோதனை செய்ததில், அதிலிருந்து 110 கிலோ கஞ்சா இருந்தது தெரியவந்ததுள்ளது.

தொடர்ந்து, தமிழக கடலோரப் பகுதிகளில் கஞ்சா மூட்டைகள் கரை ஒதுங்குவது குறித்து, இந்திய மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் நடத்திய இரகசிய விசாரணையில், நாகை மாவட்ட கடற்கரையிலிருந்து பைவர் படகில் இலங்கைக்கு கஞ்சா மூட்டைகள், 20 நாள்களுக்கு முன்பு கடத்திச் செல்லப்பட்டதாகவும், கடல் சீற்றம் காரணமாக அந்தப் படகு நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியதாகவும் தெரியவருகின்றது.

ஆனால், அந்த படகில் இருந்த கஞ்சா மூட்டைகள், கடல் அலை காரணமாக கடலில் நாலாபுறமும் சிதறி, தமிழகத்திலும் இலங்கை கடற்கரையிலும் கரை ஒதுங்கி வருவதான தகவல் வெளியாகியிருந்தன.

மேலும், கஞ்சா மூட்டைகள் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு யார் கடத்தி சென்றார்கள் என்பது குறித்து, தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறன. 2022.08.01ஆம் திகதி முதல் கடந்த 12 நாள்களில், தமிழக கடலோர பகுதிகளில் சுமார் 800 கிலோ கிராமுக்கு அதிகமான கஞ்சா, கரைஒதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து, இலங்கைக்கு வலிமாத்திரைகள் கடத்த இருப்பதாக தமிழக க்யூ பிரிவு பொலிஸாருக்கு கிடத்த தகவலையடுத்து, திரேஸ்புரம் கடற்கரை பகுதியில் நிறுத்திப்பட்டிருந்த படகுகளை சோதனை செய்துள்ளனர். இதன்போது பதிவு எண் இல்லாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகைப் பரிசோதித்த போது, அதில் இலங்கைக்கு கடத்துவதற்காக சுமார் 443 அட்டைகளில் 4,430 ப்ரீகபலின் 150 வலி நிவாரண மாத்திரைகள் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.







இது இவ்வாறு இருக்க, மன்னார் வளைகுடா கடல் வழியாக, இலங்கைக்கு கடத்த இருந்த மூன்று இலட்சம் மதிப்பிலான 25 கிலோ கிராம் பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளை பறிமுதல் செய்த மண்டபம் வனத்துறை அதிகாரிகள், கடல் அட்டையை வாகனத்தில் எடுத்து சென்ற இருவரை கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

கடல் மாசுபடுதல், அந்நிய ஊடுருவல் குறித்து மீனவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த, பாய்மர படகில் தமிழக கடலோர பாதுகாப்பு குழு பொலிஸார் சாகச பயணம் மேற்கொண்டிருந்தனர்.

தமிழக கடலோர பாதுகாப்பு குழு மற்றும் றோயல் மெட்ராஸ் யாட்ச் சங்கம் இணைந்து, சென்னையில் இருந்து இராமேஸ்வரம் அடுத்த மண்டபம் இந்திய கடலோர காவல் படை முகாம் வரை, 510 கடல் மைல் தூரம் பாய்மர படகில் தமிழக கடலோர பாதுகாப்பு குழு பொலிஸார் பயணம் செய்திருந்தனர்.

தமிழக கிழக்கு பாக்குநீரிணையில் அந்நிய ஊடுருவலை தடுக்கவும், பாதுகாப்பான சூழ்நிலையை உறுதிப்படுத்தவும், பாதுகாப்பு குறைபாடு உள்ள இறங்கு தளங்களின் விவரங்கள் சேகரிக்கவும், கடல் மாசுபாட்டை தடுக்கவும், மீனவர்களிடையே கலந்துரையாடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்தக் கடல் சாகச பாய்மர படகு பயணம் அமைந்திருந்தது.

பூகோள ரீதியில் இலங்கையும் இந்தியாவும் வெறுமனே 32 கடல் மைல் தொலைவிலுள்ள நாடுகளாகும். இருந்த போதிலும், கடல்மார்க்கமாக சட்டவிரோதமாக பொருட்களையும் போதைப் பொருட்களையும் கடத்தி விற்பனை செய்வதால் பாதிப்படையப்போவது இருநாடுகளினதும் இளம் சமூதாயமே ஆகும். இலங்கை மற்றும் இந்திய கடலோர பாதுகாப்பு படையினர் தத்தமது வினைத்திறனான சேவைகளை, இன்னும் முடுக்கிவிடவேண்டியுள்ளமை இத்தகைய சம்பவங்களில் இருந்து தெரியவருகின்றது.

இரு நாடுகளினது அரசுகளும் பாதுகாப்பு தரப்பினர்களுக்கு நவீன கண்காணிப்பு கருவிகள், விசேட பயிற்சிகள் உள்ளிட்டவற்கை வழங்கி, சட்டவிரோக செயற்பாடுகளை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்கு திடங்சகற்பம் பூணவேண்டும். இதுவே இருநாடுகளிலுமுள்ள குடி மக்களின் மாபெரும் எதிர்பார்ப்பாகும்.

# சைக்கிளோட்டம் காலத்தின் தேவை



க. விஜயரெத்தினம்






நாட்டில் ஜனாதிபதி கோட்டாபயவின் ஆட்சியானது, நாட்டுமக்களுக்கு துன்பத்தையும் சலிப்பயும் வழங்கியிருந்தது. குறிப்பாக, மாணவர்கள் முதல் முதியோர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தினர் உள்ளிட்டோர், எரிபொருள் பிரச்சினை, எரிவாயு பிரச்சினை, பொருட்களின் விலையேற்றம், தட்டுப்பாடு உட்பட பல பிரச்சினைகளை எதிர்கொண்டு, அனைவரினதும் மனநிலைகளும் பாதிப்படைந்துள்ளதை காணக்கூடியதாக இருந்தது.

எரிபொருள் தட்டுப்பாடு, பற்றாக்குறை சம்பந்தமாக பாடசாலைக்கு மாணவர்களின் வரவும் குறைவாகக் காணப்பட்டது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிப்படையுமா என்ற அச்ச உணர்வு, பெற்றோர் மத்தியில் காணப்பட்டது. எரிபொருள் பிரச்சினை காரணமாக, பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையில், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்க்கும் வகையிலும், மாணவர்கள் எதிர்நோக்கிய போக்குவரத்துப் பிரச்சினையை மையப்படுத்தி, 'பாடசாலைக்கு ஆசிரியர்களையும் மாணவர்களையும் வரவழைத்தல்; சைக்கிள் பாவனையை அதிகரித்தல்' எனும் விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற முன்மாதிரியான பாடசாலைகளான மெதடிஸ்த மத்திய கல்லூரி தேசிய பாடசாலையும் மட்டக்களப்பு வின்சென்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலையும் இணைந்து, 2021, 2022 ஆண்டுக்கான உயர்தர மாணவர் தலைவர்களால் இந்த மாபெரும் விழிப்புணர்வு சைக்கிளோட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எதிர்காலத்தில் எரிபொருள் பற்றாக்குறை இருந்தாலும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் தலைமையிலான பாடசாலை உத்தியோகஸ்தர்கள் பாடசாலைக்கு வந்து, பாடசாலையை இயக்கச் செய்வதன் மூலம், மாணவர்களின் கல்விப்பசி, அறிவுப்பசிகளை தங்குதடையின்றி போக்கக்கூடியதாக இருக்கும் என்பது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.

தற்போதைய மாணவர்களின் உடல்திணிவுச் சுட்டியானது வயதுக்கும் மாணவர்களின் நிறைக்கும் பொருத்தப்பாடு இல்லாமல், சில மாணவர்கள் உடல் பெருத்து, வேலை செய்யமுடியாமல், தங்களின் உடலை அசைக்க முடியாமல் அல்லற்படுவதையும் ஆரோக்கியமற்று, கல்வியை தொடர்வதற்கு விருப்பமில்லாமல் இருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறான நிலையில்தான் சைக்கிள் பவனி ஆரப்பபிக்கப்பட்டது.

பெற்றோர்கள் தங்களின் வாகனங்களில் வீட்டிலிருந்து, பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு பாடசாலையில் இறக்கியும், மீண்டும் வீட்டுக்கு ஏற்றிச் சென்றும் அதன் பின்னர், சாப்பாட்டைக் கொடுத்து, மீண்டும் தங்களின் வாகனங்களில் பிரத்தியேக வகுப்புகளிலும் ஏற்றி இறக்கி விடுகின்றார்கள்.

சொந்த வாகனம் இல்லாதவர்கள் அதிகளவு பணத்தை கொடுத்து, பிள்ளைகளை படிப்பித்தலில் பெற்றோர்கள் கரிசனை செலுத்துகின்றார்கள். சொந்த வாகனமும் பணமும் இல்லாத சில மாணவர்கள், பாடசாலைகளுக்கும் தனியார் வகுப்புக்கும் கால்நடையாக வருவதை காணக்கூடியதாகவுள்ளது. இன்னும் சிலர் பாடசாலை பக்கமே இல்லை. இவ்வாறான விழிப்பூணர்வூட்டும் சைக்கிள் ஓட்டப் பவனியானது, காலத்தின் சூழ்நிலைக்கு அவசியமாக தேவைப்படுகின்றது.

அனைத்து மாணவர்களும் சைக்கிளில் பாடசாலைக்கு வருவதால், உடல் ஆரோக்கியம் பேணப்படும். இவ்வாறான அப்பியாச செயற்பாடு, உடற்பயிற்சி என்பற்றின் மூலம், உடல்திணிவுச்சுட்டி பேணப்படுவதுடன் உடல் சிறந்த முறையில் பராமரிக்கப்படும். இதனால் மாணவர்கள் பாடசாலைக்கு, ஆரோக்கியத்துடன் யாரிலும் தங்கியிராமல் சுயமாக வரக்கூடிய நிலைமை உருவாக்கப்படுகின்றது.

இவ்வாறு காலை 7.00 மணிமுதல் இரவு 8.00 மணி வரையும் பிள்ளைகளை கற்றல் செயற்பாட்டுக்கு ஊக்குவிப்பதால், மாணவர்கள் விளையாட்டில் ஈடுபட முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். குறைந்தது, ஒவ்வொருநாளும் அரை மணித்தியாலம் மாணவர்களை விளையாட்டில் ஈடுபடுத்த வேண்டும். இதனால் உடல் ஆரோக்கியம் பேணப்பட்டு, மாணவர்களின் கற்றல் செயற்பாடு அதிகரிக்கும். மாணவர்களின் தேகஆரோக்கியம் முறையாகப் பேணப்படுவதற்கு சைக்கிள் பாவனை குறித்த விழிப்பூட்டல் தேவையாக இருக்கின்றது.

இவ்வாறான உடற்பயிற்ச்சி வேலைத்திட்டத்தை, மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபர் தலைமையிலான நிருவாகமும் வின்சன்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலையின் அதிபர் தலைமையிலான நிருவாகமும் ஒத்திசைந்து, மாணவர்களை விழிப்பூட்டும் வகையில் சைக்கிளோட்டத்தை பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்து வைத்து, மட்டக்களப்பில் விழிப்பூட்டினார்கள்.இது வரவேற்கத்தக்க விடயமாகும்.

இச்சைக்கிளோட்டம், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் நுழைவாயிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு, பிரதான வீதியில் ஊடாக, மட்டக்களப்பு - திருமலை வீதியில் கோப்பின் தனியார் விடுதிவரையும் சென்று, அங்கிருந்து மீண்டும் பிரதான வீதி வழியாக வந்து, டெலிகொம் வீதியூடாக ஜீ.வீ தனியார் வைத்தியசாலை வரையும் சென்று, மீண்டும் பிரதான வீதி வழியாக பாடசாலையில் சைக்கிளோட்டம் நிறைவடைந்தது.

இவ்விழிப்புணர்வு சைக்கிளோட்டத்தில், 100க்கும் மேற்பட்ட உயர்தர மாணவர்கள், சாதாரண தர மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபற்றினார்கள். இவ்விழிப்புணர்வு சைக்கிளோட்ட ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் அதிபர் இராதுரை பாஸ்கர், பிரதியதிபர் எஸ். நந்தகோபால், வின்சென்ட் உயர்தரப் பெண்கள் பாடசாலையின் அதிபர் திருமதி. தவத்திருமகள் உதயகுமார், மெதடிஸ்த மத்திய கலூரியின் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எந்திரி வை. கோபிநாத், பழைய மாணவர் சங்க தலைவர் எஸ். பகீரதன், வின்சென்ட் உயர்தர பெண்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தலைவி திருமதி தர்சினி சுந்தரநேசன், சாரண குழுத்தலைவர் எம். சந்திரன், பொறியியலாளர் என். திருவருட்செல்வம் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

இச்சைக்கிளோட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு எஸ்.எல்.ரீ.மொபிட்டல் சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பி வழங்கப்பட்டது.





மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் அதிபர் இராசதுரை பாஸ்கர் கருத்து தெரிவிக்கையில், "இந்தச் சைக்கிள் பவனியால் பாடாசாலைக்கு வரும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் வரவு அதிகரிக்கப்படும். இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் அதிகரித்து, மாணவர்களின் கல்வி விருத்தியடைகின்றது. எரிபொருள் பிரச்சினை காரணமாக, தொடர்ச்சியாக பாடசாலையை மூடிவிடக்கூடாது. இதனால் அதிகமாக பாதிக்கப்படுவது மாணவர்கள்தான். பொருளாதார நெருக்கடிக்கும் நாட்டை மூடுவதால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கூடாது என்பதற்காகத்தான் பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் இவ்விழிப்பூட்டலை ஏற்பாடு செய்துள்ளோம். இதனால் எமது பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கும்,ஏனைய கல்வி வலயங்களுக்கும், ஏனைய மாவட்டத்தில் இருக்கின்றவர்களுக்கும் இவ்விழிப்புணர்வு காலத்தின் கட்டாயமாகும். இதனால் பாடசாலைக்கு மாணவர்கள் தொடர்ச்சியாக வருவார்கள்" என்றார். மட்டக்களப்பு வின்சென்ட் உயர்தர பெண்கள் பாடசாலையின் அதிபர் திருமதி. தவத்திருமகள் உதயகுமார் கருத்து தெரிவிக்கையில், "எரிபொருள் பிரச்சினை காரணமாக, பாடசலைக்கு போக்குவரத்து செய்ய முடியாமல் இருப்பவர்களுக்கு சைக்கிள் விழிப்பூட்டும் பவனியால் மாணவர்கள் கல்வியை ஒருபோதும் இழந்து விடமாட்டார்கள். மாணவர்களின் கற்றல் தேவைக்கு அத்திவாரமாக செயற்படும் பாடசாலைகளை மூடுவதால், பாடசாலை மாணவர்களுக்குதான் பாதிப்பு ஏற்படும். இவ்விழிப்பூட்டலால் மாணவர்கள் ஒருபோதும் கல்வியை இழக்க மாட்டார்கள் என்பதுதான் சபதமாகும். எதிர்வரும் காலங்களில் எரிபொருள் எமது சமூகத்துக்குக் கிடைத்தாலும் எரிபொருளை சேமிப்பதற்கு சைக்கிள் பாவனை அவசியமாகின்றது" எனத்தெரிவித்தார்.

## சமூகப் பாதுகாப்பற்ற சிறுமியர்

# வாழ்வாங்கு வாழ வழிகாட்டும்

### மலையக சிறுவர் இல்லம்

எம். செல்வராஜா










மலையக சிறுவர் இல்லம், பதுளை மாநகரில் தனது இருபதாவது அகவையில் தடம் பதித்து, பல்வேறு சாதனைகளுடன் வெற்றி இலக்கை நோக்கி, தனக்கென சொந்தமான கட்டடத்தில் இன்று செயற்பட்டு வருகின்றது. சில தினங்களுக்கு முன்னர், நிரந்தர கட்டடத்தில் இவ்வில்லம் அமைந்ததுடன் இருபதாவது அகவையையும் கொண்டாடியது.

இவ்வில்லத்தில் இருந்து வெளியேறிய மாணவிகள், தங்களுடைய வாழ்க்கை பயணத்தை திறம்பட ஆரம்பித்துள்ளதுடன், அநேகர் அரசு தொழில் வாய்ப்புகளையும், தனியார் துறையில் தொழில் வாய்ப்புகளையும் அவர்களிலும் சிலர் மணம் முடித்து, நிறைவான திருமண வாழ்வையும் வாழ்பவர்களாக இருந்து வருகின்றார்கள் மகிழ்ச்சிக்குரிய விடயங்களாகும்.

மலையகத்தை சேர்ந்த, சட்டத்தின் முன் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய சிறுமியர்களாக இனம் காணப்பட்ட பெற்றோரை இழந்த, பாதுகாவலர்களை இழந்த, அரவணைப்பற்ற, சமூகப் பாதுகாப்பற்ற சிறுமியர்கள், நீதிமன்றத்தின் மூலம் அரவணைக்கப்பட வேண்டும் என்றும், அவர்களுக்கு ஆதரவு வழங்குவதை நோக்கமாகக் கொண்டும் அமெரிக்க துறவியான சுவாமி தந்திர தேவாவின் முயற்சியின் மூலமாகவும், மட்டக்களப்பு சமூக நலன்புரி அமைப்பின் நெறிப்படுத்தலின் ஊடாகவும், லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாக சபை மற்றும் அறங்காவலர் சபையினரின் ஆரம்ப கட்ட நிதி உதவியுடனும் மலையக சிறுவர் இல்லம், இல. 168, மஹியங்கனை வீதி, பதுளை என்ற விலாசத்தில் 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆறாம் திகதி, ஆறு சிறுமியருடன் மலையக சிறுவர் இல்லம், அதன் ஸ்தாபக தலைவர் ஆர். எம். கிருஷ்ணசாமியால் ஆரம்பிக்கப்பட்டது.

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அன்றைய நிர்வாக சபை தலைவர் செ. கருணைலிங்கத்தின் பங்கேற்புடன் பதுளை பிரதேசத்தை சேர்ந்த பல்வேறு பிரமுகர்களின் பங்கேற்புடன் இச்சிறுவர் இல்லம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மலையக சிறுவர் இல்லம், முழுமையாக சமூக உதவி ஸ்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது. அதன் நிர்வாக குழுவினரின் ஆலோசனைகளின் பெயரில் மலையகத்தில் தொழில் செய்யும் தொழிலாளர்களின் வறுமையின் காரணமாக, தங்களின் பிள்ளைகளின் கல்வியை தொடர முடியாதவர்களுக்கு, கல்வி கற்பதற்கு உதவிகள் நல்கும் இடமாக இருந்து வருகின்றது.

மலையகத்தில் கல்வி கற்ற இளைஞர், யுவதிகளுக்கு இலவசமான கணினி அறிவு, தையல் முதலான தொழில்சார் பயிற்சி நெறிகளை வழங்கி, கைதேர்ந்தவர்களாக மாற்ற பல்வேறு முயற்சிகளையும் எடுத்து வருகின்றது. 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விவசாய தோட்ட தொழிலாளர் காங்கிரஸின் நோக்கத்தை ஏற்புடையதாக, அனைவரின் சம்மதத்துடன் இவ்வில்லம் இயங்குகிறது.

ஆறு பெண் பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இம் மலையக சிறுவர் இல்லத்தில் 14, 23, 31 என்றவகையில் சிறுமியர்களினுடைய எண்ணிக்கை அதிகரித்து வந்தது. சராசரியாக 35 சிறுமியர்கள் இவ்வில்லத்தில் தற்போது பராமரிக்கப்படுகின்றார்கள்.

சுயாதீனமான இல்லமாக ஆரம்பிக்கப்பட்ட மலையக சிறுவர் இல்லத்தின் சேவைகளை உணர்ந்த அரசுதரப்பு, 2001 ஆம் ஆண்டு தொடக்கம் ஊவா மாகாண சபையின் சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, சிறுவர் இல்லமாக மாற்றி அமைக்கப்பட்டது. மேலும், இலங்கை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, இலங்கை மகளிர் பொலிஸ் பிரிவு, சிறுவர் பாதுகாப்பு பிரிவு முதலான முற்றும் முழுமையான அரச கண்காணிப்பின் கீழ், சமூக உதவி ஸ்தாபனத்தின் மேற்பார்வையில் சிறுவர் இல்லம் அமையப் பெற்றுள்ளது.

இரண்டு தசாப்த காலமாக நிரந்தர கட்டடம் இன்றி, 13க்கும் மேற்பட்ட குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டடங்களிலேயே, இவ்வில்லம் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தது.

இவ்வில்லத்துக்கான நிரந்தர கட்டடத்தை அமைக்கும் பணியில், அதன் ஸ்தாபக தலைவர் ஆர். எம். கிருஷ்ணசாமி மேற்கொண்ட முயற்சிகளுக்கு, லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் பிரேமசந்திரனின் முழு முயற்சியில் காணியைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார சிக்கல்களுடன் இல்ல கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க முடியாமல், சுமார் ஐந்து வருட காலம் கடந்து சென்றாலும் அடித்தளத்துக்கு தேவையான பண உதவிகளை ஸ்தாபக தலைவர் ஆர். எம். கிருஷ்ணசாமி பெற்றுக்கொடுத்து ஆரம்பித்து வைத்தார். இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் அறங்காவலர் டொக்டர் பரமநாதனின் முழு முயற்சியுடனும் அறங்காவலர் ஸ்ரங்கன், அன்றைய நிர்வாக சபை தலைவர் செ. கருணைலிங்கம் ஆகியோரின் ஒத்துழைப்புடன் முதலாவது மாடிக்கான அமைப்பு வேலைகள் நிறைவு பெற்றன.

இரண்டு மாடி கட்டடத்துருக்கான அமைப்பு வேலைகள் பூரணப்படுத்தல், நிறைவு வேலைகளை செய்வதில் பாரிய சவால்கள் காணப்பட்ட சூழ்நிலையில், கட்டுமான பணிகள் ஆறு மாதத்துக்குப் பின் போடப்பட்டிருந்தது.

இவ்வாறான இக்கட்டான சூழ்நிலையில், ரஞ்சன் சிவஞானசுந்தரத்தின் தலைமையிலான 'வன்னிஹோப்' அவுஸ்திரேலியா நிறுவனத்தார் கனடாவில் வசிக்கும் எம்.டி செல்லையா, மனோன்மணி ஞாபகார்த்த நிதியத்தின் ஊடான தொடர்புகளை ஏற்படுத்தி, நிறைவு வேலைகளுக்கு ஒத்துழைப்பு நல்கியமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

மேலும், ஒரு சில குறைவேலைகள் புதிய கட்டடத்தில் காணப்படினும், அவை இவ்வாறான கொடை வள்ளல்களால், மலையக சிறுவர் இல்ல பிள்ளைகளுக்கு நிவர்த்தி செய்து தரப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

மலையக சிறுவர் இல்லத்தில் இதுவரை 450 க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்களுடைய வாழ்வாதார தேவைகளை, நிறைவு செய்துள்ளார்கள்.

சிறுவர் இல்ல பிள்ளைகளுக்கு அனேகமாக உள்ள பிரச்சினை பிறப்புச் சான்றிதழ்' பெற்றுக் கொள்வதாகும். அவர்களுக்கான அனுமான பத்திரங்களை பெற்று, அதன் ஊடாக அவர்களுக்கான பாடசாலை அனுமதிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. அதன் பெறுபேறாக க. பொ. த சாதாரண பரீட்சைக்கு தோன்றி 2007 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சிலரைத் தவிர அநேகர் உயர்தரம் கற்று, தமது பாடசாலை கல்வியை முழுமைப்படுத்தி உள்ளனர். இதிலும் பலருக்கு பல்கலைக்கழக தெரிவுகள் கிடைக்கப்பெற்று பட்டதாரிகளாக, தங்களுடைய வாழ்க்கை பயணத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

விசேட தேவை உடைய பெண் பிள்ளைகளை இனம் கண்டு, அவர்களுக்கு தேவையான இயல், இசை, நடனம், தமிழ் மொழி, ஆங்கில மொழி, கணிதம் முதலான வகுப்புகளும் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த மனிதநேய பணிக்கு, அன்று தொடக்கம் இன்று வரை மனமுவந்து உதவி செய்யும் சமூக ஆர்வலர்கள், வர்த்தக பிரமுகர்கள், நிறுவனத்தினர், வெளிநாட்டு ஒத்துழைப்பாளர்கள் என அனைவரும் பங்களிப்பு செய்துள்ளனர். இவ்விலத்தில் தங்கி, தமது வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ளும் சின்னஞ்சிறார்களுக்கு உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு என அனைத்தையும் இவ்வில்லம் பெற்றுக் கொடுக்கின்றது.

மேலும், மலையக சிறுவர் இல்லம் மாகாணத்திலேயே சிறுவர் நன்நடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் 19 இல்லங்களில் ஆன்மீகம், கற்றல், கலாசாரம், ஒழுக்கம், பண்பாடு, கட்டுப்பாடு, விளையாட்டு, மனையியல், தையல் ஆகிய துறைகளிலும் முதன்மை நிலையில் இருப்பதால் சிறுவர் இல்லங்களுக்கு இடையிலான மதிப்பீட்டில் அரசு முதன்மை சான்றிதழ்களையும் இம்மலையக சிறுவர் இல்லமே தொடர்ச்சியாக தமதாக்கி கொண்டு வருகின்றது.

20 வருட கால இருளுக்கு ஒளி வீச முன்வந்து உழைத்த சிறுவர் நன்னடத்தை மற்றும் பாதுகாப்பு திணைக்களத்தின் ஆணையாளருக்கும் ஊவா மாகாண சபையின் பிரதம செயலாளருக்கும் அனைத்து பெருந்தகைகளுக்கும் இவ்வில்லம் தமது பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கின்றது.


# அனாமிகா களரி பண்பாட்டு மையம்

## திறப்பு விழாவும் கலை இலக்கிய பெருவிழாவும்

அ. அச்சுதன்















திருகோணமலையின் தெற்கே முத்துக் குளித்த மூதூரின் கிழக்கே, நாற்புறமும் நீரோடைகள் சூழ்ந்தும் கண்டல் தாவரங்கள் வளர்ந்து பசுமையான பாதுகாப்பு அரணாகவும், பச்சை பசேலெனக் காட்சி அளித்துக் கொண்டிருக்கும் திடல் பூமியே சேனையூர் கிராமமாகும்.

'சேனையூர்' என்ற கிராமத்தின் பெயர், மன்னன் எல்லாளனுடன் தொடர்புபடுகிறது. இந்த வரலாற்று நினைவை, கலாபூஷணம் வில்லுப்பாட்டு வீரசிங்கம் தன் கவிதையில் இப்படி சொல்கிறார்.

'பரிவாரமுடனே எல்லாளன் வந்து இறங்கினான் அன்று இலங்கை துறையில் படைகளை நகர்த்தி வருகிறபோது இடையில் கண்டான் எம்மூர்தன்னை மருத மரங்களின் விரியுடை சேனையை பெரு மன்னன் கண்டு தாகம் தணிய தண்ணீர் அருந்தி களைப்பது நீங்கி பூத்துக்குலுங்கி பூமணம் வீசி மாங்குயில் பாடி மகிழ்ந்திடும் ஊரில் ஆற்ற கரையில் அழகிய மருதநிழலில் களைத்து கிளைத்து கருநடை நடந்து வந்த தன்சேனை குலைந்து போகாமல் கொண்டு வந்து மருத நிழலில் வைத்தான் அன்று'

### ஊரின் அற்புதமும் வரலாற்றுச் சிறப்பும்

மருத நிழலில் சேனையை வைத்ததால் மருதடிச் சேனை எனும் பெயராயிற்று, மருதடிச்சேனை என வழங்கிய அப்பெயர் குன்றிக்குறுகி சேனையூராகி சென்றது. சேனையூர், ஈழத்தமிழர் வரலாற்றில் முக்கியத்துவம் மிக்க இடமாகும். பலஆற்றலுள்ளவர்களும் அறிவாற்றலுள்ளவர்களும் பண்பாளர்களும், இக்கிராமத்தில் தோன்றி, வாழ்ந்து மறைந்துள்ளனர்.

விளையாட்டுத்துறை, கலைத்துறை, சமயத்துறை, விவசாயத்துறை போன்றவற்றில், இயல்பாகவே மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். இதற்கு சேனையூர் மத்திய கல்லூரி அடித்தளமிட்டுக் கொடுக்கின்றது.

ஆயிரம் வருடங்கள் பழைமையான வீரபத்திரர் பரிகல வேள்வி, சேனையூரின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை சொல்லி நிற்கின்றது. சோழர் காலத்துடன் தொடர்புபட்டு நிற்கும் இம்மரபு, இன்றுவரை சேனையூரில் தொடர்கின்றது.

ஏழு கன்னிமார் பூசை, வெகுண்டெழும் வீரபத்திரரை குளிர்வித்தல், பரிகலங்களை அழைத்தல், ஊருக்குள் நோய்நொடி வராமல் வேண்டுதல் என, இந்தப் பரிகல வேள்வி, தமிழர் தம் வழிபாட்டுப் பாரம்பரியங்களைச் சொல்லி நிற்கின்றது. குளிர்த்தி பாடுதலுடன் கொண்டாட்டமாய் நிறைவுறும் இந்த வேள்வி, சேனையூரின் கலாசார தனித்துவத்தின் வெளிப்பாடு ஆகும். இன்றும் கும்பவிழா, கும்பஊர்வலம் இன்னும் பல நிகழ்வுகள் பாரம்பரிய முறைப்படி அச்சொட்டாக இடம்பெற்று வருகின்றன.

காலம் காலமாக கலைகளில் சிறந்த இடமாகவும் அகில இலங்கையிலும் உலகப்புகழ் பெற்ற கலைஞர்களையும் தன்னகத்தே கொண்ட ஊரில், வரலாற்று நிகழ்வாய் 'அனாமிகா களரி பண்பாட்டு மையம்', முழு இலங்கையும் மகிழ்ச்சி கொள்ளும் வகையில், பிரமாண்டமான முறையில் சனிக்கிழமை (06) திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக தென்னிந்திய நடிகர் நாசர் வருகைதந்து, பண்பாட்டு மையத்தைத் திறந்துவைத்தார். இவர் அங்கு உரையாற்றும் போது, "ஒரு கோட்டையைக் கட்டுவதை விடவும் உன்னதமான விடயம், இந்த 'அனாமிகா களரி பண்பாட்டு மையம்' கட்டியதாகும். இங்கு பகட்டான விடயம் ஒன்றும் கிடையாது. நான் ஒரு விதத்தில் பொறாமையும் கொள்கின்றேன். நாங்களும் நடிகர் சங்கத்துக்கு ஒரு கட்டடம் கட்டிக் கொண்டிருக்கின்றோம். பல பிரபலங்கள் இருந்தும் பல ஆண்டுகளாகின்றன. ஆனால், ஓர் எளிய மனிதனாக இருந்து, தன்னுடைய நண்பர்கள் மூலமாகவும் தெரிந்தவர்கள் மூலமாகவும் செங்கல் செங்கல்லாகப் பெற்று, இந்தக் கலைக்கூடத்தை கட்டி முடித்துள்ளார் பேராசிரியர் பாலசுகுமார்" என்றார்.

தொடர்ந்து தனது உரையில், "பேராசிரியர் பாலசுகுமாரை நான் வெகு நாள்களாக அறிவேன். நாடகம் எங்களுக்கு பொது மொழியாக இருந்தது. அவருடைய மாணவர்கள், என்னுடைய மாணவர்களாக இருந்திருக்கிறார்கள். நாங்கள் எப்போது பேசினாலும், நாடகங்களைப் பற்றியே பெரும்பாலும் பேசுவோம். நிகழ்கலைகளைப் எவ்வாறு பாதுகாக்கலாம் என்று பேசுவோம். அந்த உறவில் மலர்ந்ததுதான் எங்கள் நட்பு" என்றார் நாசர்.

தொடக்க விழா, வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. விருந்தினர்களாக கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் வ. கனகசிங்கம், யாழ்ப்பாண அரச அதிபர் க. மகேசன், பேராசிரியர் சி. மௌனகுரு, கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கோபாலரெட்ணம், கிழக்கு மாகாண கலாசார திணைக்களப் பணிப்பாளர் சு. சரண்யா, கனடா தமிழ் பாடசாலைகளின் தலைவர் ச. குகதாசன் உட்பட பல அதிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அனாமிகா களரி பண்பாட்டு மையத்தின் ஸ்தாபகர் பேராசிரியர் பாலசுகுமார் செயற்பாட்டுரையை வழங்கினார். அத்தோடு, கூத்துப் பாடல்களைப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார். கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இன்னிய வாத்திய இசையோடும் சிலம்பாட்டத்துடனும் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டமை தமிழர்தம் பாரம்பரியத்துடன் கூடிய அழகான காட்சிகளாக அமைந்திருந்தன.

தந்தை தனது மகளுக்காய் கட்டிய, அவளது நினைவாக உருவாகிய, அவளது பெயரிலேயே அமைந்த, அனாமிகா களரி பண்பாட்டு மையத்தின் தொடக்கவிழா நிகழ்வுடன் இணைந்ததாக கலை இலக்கிய பெருவிழாவும் நடைபெற்றது.

நூலகம், ஆவணகாப்பகம், கணினிகூடம், கலை மண்டபம், களரி என அனைத்தும் ஓர் இடத்தில், அனாமிகா பண்பாட்டு மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த தமிழர் பண்பாட்டு மையத்தின் முகப்பில், அழகான ஓவியங்கள் புது மெருகூட்டியிருந்தன.

உலகம் முழுவதும் வாழ்கின்ற உறவுகள் கைகோர்க்க, ஒரு பெரும் கனவை நனவாக்கிய பெருமை பேராசிரியர் பாலசுகுமாரை சென்றடையும். அவரின் முயற்சியால் இந்தப் பண்பாட்டு மையம், சேனையூரில் உதயம் பெற்றுள்ளது. எதிர்கால சந்ததியினருக்கு இதுவோர் அறிவார்ந்த கலைக்கூடமாகும்.

சேனையூர், அனாமிகா களரி பண்பாட்டு மையத்தின் தொடக்க விழாவில் - கலை இலக்கிய பெருவிழாவில், நூல் வெளியீடுகள், கருத்தமர்வுகள், இன்னியம், புத்தகக் கண்காட்சி, பரதநாட்டியம், களிகம்பு, சிலம்பம், கரகம், பறையிசை, கோவலன் கூத்து, மன்னார் கூத்துகள், வசந்தன் மண்ணிசை, வடமோடி, தென்மோடி, காத்தான் கூத்து, குச்சுப்புடி, மோகினியாட்டம், மலையகக்கூத்து, ஈழ நாட்டியம், தெருக்கூத்து என்பன இடம்பெற்றமை வரலாற்று நிகழ்வாகும். ஞாயிற்றுக்கிழமையும் (07) கலைஞர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு, வரலாறு காணாத வகையில், பல கூத்து நிகழ்ச்சிகள் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தமை சிறப்புக்குரியதாகும்.

இப்பண்பாட்டு மையமானது, எதிர்காலத்தில் கலைஞர்களையும் புதிய கலைகளையும் உருவாக்கும் என நம்பலாம். இங்கு அமைக்கப்பட்டுள்ள வட்டகளரி அமைப்பானது மிகப் பெரியதாக அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பாகும்.

# 'செகண்ட் ஷோ'

ஹஸ்பர் ஏ ஹலீம்
ahhasfar@gmail.com











**இலங்கை சினிமாத்துறையில் 'மக்கள் நட்சத்திரம்' ஹேமல் ரணசிங்க நடித்த தமிழ் திரைப்படம் 'செகண்ட் ஷோ' திருகோணமலை, நெல்சன் திரையரங்கில் திரையிடப்பட்டது.**

திரைப்படத்தின் கதாநாயகன் ஹேமல் ரணசிங்க, 'டாக் ரூம்' திரைப்படத்தின் இலங்கைக்கான பிரதிநிதி (தயாரிப்பு) கௌசல்யா விக்கிரமசிங்க, சமூக ஆர்வலர்கள் திருகோணமலையை சேர்ந்த சகோதர மொழி இளைஞர், யுவதிகள் தமிழ் பேசும் இளைஞர் யுவதிகள் இத்திரைப்படத்தை கண்டு களித்திருந்தனர்.

பெண்களை பாலியல் ரீதியான உறவுகளுக்கு மாத்திரம் பயன்படுத்துவதும் பெண்கள் என்றால் பாலியல் ஜடம் என்று நினைப்பவர்களுக்கும், வாழ்க்கை என்பது பாலியல் ரீதியான உணர்வுகளுக்கு மாத்திரம் தான் எனத் தவறான புரிதலுடன் வாழ்பவர்களும் இத்திரைப்படம் நல்லதோர் படிப்பினை தரும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. வாழ்க்கையின் யதார்த்தங்களை தத்ரூபமாக இத்திரைப்படம் சித்திரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இத் திரைப்படமானது, தமிழ் நாட்டிலுள்ள 'டார்க் ரூம்' நிறுவன திரைப்பட தயாரிப்பில் வெளியாகி உள்ளது. இத்திரைப்படத்தை, பிரதான தயாரிப்பாளராக கணேஷ் மகாதேவன் தயாரித்துள்ளார் . இலங்கையில் இணை தயாரிப்பாளராக கௌசல்யா விக்கிரமசிங்கவும் செயற்பட்டுள்ளார் . குறித்த திரைப்பட தயாரிப்பில், தமிழ் நாட்டை சேர்ந்தவரும் பணிப்பாளருமான ஏ.டி. ஞானம், ஒலி வடிவமைப்பு டொக்டர் அம்பி சுப்ரமணியம், பாடல் பரணிவேல் ஆகியோரும் பங்களிப்புச் செய்துள்ளனர்.

இளைஞர்களுக்கான ஒரு விழிப்புணர்வு திரைப்படமாக இது அமைந்துள்ளது. பெண்கள் என்பது பாலியலுக்காக மாத்திரமன்றி, போதை பழக்கமே ஓர் ஆணை பெண்ணின் மீதான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு தூண்டுகிறது என்ற மையக்கருத்தை சமூக மட்டத்தில் நடக்கும் சம்பவங்களின் ஊடாக காட்சிப்படுத்தி, 'செகண்ட் ஷோ' திரைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பெண்களை பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கி, போதைப் பொருள் பாவனை மூலமாக, அதிக பலாத்காரங்களை பெண்கள் மீது திணித்தால், அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதையும் இத் திரைப்படம் எடுத்துக் காட்டுகிறது. இதனை 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பார்த்து, விழிப்புணர்வு பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.

> **"போதைப் பொருள் பாவனை மூலமாக, அதிக பலாத்காரங்களை பெண்கள் மீது திணித்தால், அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதையும் இத் திரைப்படம் எடுத்துக் காட்டுகிறது**

சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள், வாழ்க்கையின் மாற்றங்கள், திருமண வாழ்க்கை என்பவற்றை ஏற்றுக்கொண்டு, எப்படி கொண்டு செல்வதும் தொடர்பாக, இத்திரைப்படக் காட்சிகள் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன.

'செகண்ட் ஷோ' திரைப்படத்தில் வரும் கதாநாயகன், சிங்கள இனத்தை சேர்ந்தவர். ஏனைய அனைவரும் அனைத்தும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பெரும்பான்மை இன மொழி பேசும் ஒருவரை, கதாநாயகனாக கொண்டு தமிழில் திரைப்படத்தை தயாரித்திருப்பது பெரும் வரவேற்கத்தக்கதாகும்.

'செகண்ட் ஷோ' திரைப்படம் விழிப்புணர்வையும் படிப்பினையையும் ஊட்டுவதுடன், இத்தகைய திரைப்படங்களைக் கண்டு களிப்பதால், பெண் என்றால் யார் என்பதையும் புரிந்து கொள்ளமுடிகிறது.

# கைப்பணி கண்காட்சி







கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில், மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தையல் பயிற்சி நெறி கண்காட்சி, தம்பலகாமத்தில் நடைபெற்றது. தம்பலகாமம், புதுக்குடியிருப்பு மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற நிகழ்வில், தையல் பயிற்சி மாணவிகளால் தயாரிக்கப்பட்ட கைப்பணி பொருட்கள், ஆடைகள் காட்சிப்படுத்தப்பட்டன. கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் என். தனஞ்செயன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதி, உதவி பிரதேச செயலாளர் இரா. பிரசாந்தன், மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பத்மராஜா, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். பர்ஹானா, குச்சவெளி பிரதேச செயலக பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ப. செந்தூரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்களும் தகவலும்: ஹஸ்பர்)







தென்னிந்திய சினிமா நடிகர் நாசருடன் மட்டக்களப்பில் இடம்பெற்ற கதையாடல் நிகழ்வு..

# கதையாடல்

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில், சினிமா மற்றும் கலை தொடர்பிலான கதையாடல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (07) நடைபெற்றது. இந்நிகழ்வில், தென்னிந்திய சினிமா நடிகர் ‘கலைமாமணி’ நாசர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி புரோலன்ஸ் பாரதி கனெடி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், விரிவுரையாளர்களான கலாநிதி சிவரட்னம், விமல்ராஜ், மோகன தாசன், திருச்சந்தூரன் ஆகியோரும் பங்கெடுத்திருந்தார்கள்.

(படங்களும் தகவலும்: எம். எஸ். எம் நூர்தீன்)



# ‘செய்தி மடல்’ சஞ்சிகை

முல்லைத்தீவு மாவட்ட செயலக ‘செய்தி மடல்’ இலத்திரனியல் சஞ்சிகை புதன்கிழமை (10) மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனால் வெளியிடப்பட்டது.

2020ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டுக்கான ஆறாவது இதழ், இலத்திரனியல் சஞ்சிகையாக வடிவமைக்கப்பட்டு, முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட அபிவிருத்தி திட்டங்கள், கலை, கலாசார அம்சங்களை தாங்கியவாறு, ‘செய்தி மடல்’ சஞ்சிகை வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட செயலக ‘அரியாத்தை’ மாநாட்டு மண்டபத்தில், பதவிநிலை மற்றும் கிளைத் தலைவர்களுக்கான வாராந்த கலந்துரையாடலின் போதே சஞ்சிகை வெளியிடப்பட்டது.

இந் நிகழ்வில், மேலதிக




அரசாங்க அதிபர் (நிர்வாகம்) க. கனகேஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். குணபாலன், பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிளைத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்களும் தகவலும்: யது பாஸ்கரன்)









# 150ஆவது ஆண்டு விழா

யா/பண்ணாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலையின் 150ஆவது ஆண்டு விழாவும் 2022 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவும் 04.08.2022 அன்று நடைபெற்றன. இந்த நிகழ்வுகளின் பதிவுகளை படங்களில் காணலாம்.

(படங்களும் தகவலும்: சபா தனுஜன்)








# ஸ்டார் கல்லூரியின் ‘அறிவுச்சமர்’

கல்முனை ஸ்டார் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ‘அறிவுச்சமர்’ இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் கல்முனை தனியார் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஷ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும் தென் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஏ.எச். நபார், கல்முனை பொலிஸ் நிலைய



பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ. வாஹிட், அதிபர் எம். எச்.எஸ்.ஆர். மஜீதியா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

(படங்களும் தகவலும்: நூருல் ஹுதா உமர்)



# வெள்ளிவிழாவும் கௌரவமும்









தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் வெள்ளிவிழா மலர் வெளியீடும், கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் நடத்தப்பட்டது. கொட்டாஞ்சேனை விவேகானந்தா மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன், சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்தார்.



















விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 13 ஒகஸ்ட் 2022, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.